Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நவீன நாகரிக - நங்கையினரின் மனம் நறைந்த

சிறி கருமாரி நகையகம்

தற்போது புதுப்பொலிவுடன்

இல.205/6, கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் கட்டடத்தில்)
யாழ்ப்பாணம். என்னும் முகவரியில்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 26 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-ஆகீர் 02 (10.07.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:284

# பயிற்சிக் கல்லூரிகளின் நிகழ்வுகளில் தேசியத் தலைவர்!

## இளநிலை அதிகாரிகள் பயிற்சி நிறைவு நிகழ்வில்



விடுதலைப் புலிகளின் போர்ப்பயிற்சி கல்லூரியில் நேற்று இடம்பெற்ற இளநிலை அதிகாரிகளின் பயிற்சிநெறி நிறைவு நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கலந்து கொண்டு - பயிற்சி நெறியை நிறைவுசெய்த போராளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தார். அத்துடன் இந்தப் பயிற்சியின்போது சிறப்பாகச் செயற்பட்ட போராளிகளுக்கு தேசியத் தலைவரால் சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

## படையத் தொடக்க பயிற்சிக் கல்லூரி ஆண்டு விழாவில்



விடுதலைப் புலிகளின் படையத்தொடக்க பயிற்சிக்கல்லூரியின் 10ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கலந்துகொண்டு சிறப்பித்தார். நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில் படையத்தொடக்க பயிற்சி கல்லூரியால் வெளியிடப்பட்ட இரு நூல்களையும் தேசியத் தலைவர் பெற்றுக்கொண்டார்.

படையத்தொடக்க பயிற்சிக்கல்லூரியின் போராளி நிலவன் தலைமையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் திடீர்த் தேர்தல்!

## ஆயத்தமாக இருக்குமாறு தேர்தல் திணைக்களத்துக்கு உத்தரவு

கொழும்பு —

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு -செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால் - பொதுத் தேர்தலை நடத்தத் தயாராகுமாறு தேர்தல் திணைக்களத்திற்கு அரசாங்கம் ஆலோசனை வழங்கியுள்ளதாக, தேர்தல் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள வரவு - செலவுத் திட்டத்திற்கு ஜே.வி.பி ஆதரவு தெரிவிக்காதுவிடின், ஏற்படவுள்ள நெருக்கடியை எதிர்கொள்ள மாற்றுவழி இல்லாத காரணத்தால், பொதுத் தேர்தலுக்கு தேர்தல் திணைக்களத்தைத் தயாராகுமாறும் - அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை வழங்கி அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள வரவு -செலவுத் திட்டத்திற்கு ஐ.தே.கட்சி ஆதரவை வழங்காதென, அதன் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க (12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை ஏகபிரதிநிதிகளாக இலங்கை அரசு ஏற்றுள்ளது!

## விதார் ஹெல்கிசன் தெரிவிப்பு

ஒஸ்லோ —

விடுதலைப்புலிகளை, தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளென இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார்.

நெருக்கடிகளுக்கான தீர்வைக்கண்டு சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக கடந்த 5ஆம் திகதி ஒஸ்லோ பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தேசியத் தலைவரே முஸ்லிம்களுக்கு தேவையானதைப் பெற்றுத் தருவார்!

## முன்னாள் எம்.பி. அஹமட் தெரிவிப்பு

கொழும்பு —

சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்புத் தேவையற்றது. தமிழீழத் தேசியத் தலைவரே முஸ்லிம்களுக்குத் தேவையானவற்றை நியாயமான முறையில் பெற்றுத்தருவார் என இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சி.அஹமட் தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு கருத்து (12 ஆம் பக்கம் பார்க்க)

# உடனடியாக போரை தொடங்குமாறு அம்பாறை மக்கள் வேண்டுகோள்!

## தமிழீழத் தேசியத் தலைவருக்குக் கடிதம்

அம்பாறை —

சமாதான வழிமுறைகள் மூலம், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் என எதிர்பார்த்துக் காத்திருந்த காலம் போதும். இனிமேலும் தாமதிக் காமல் உடன்போரைத் தொடங்குமாறு - அம்பாறை மாவட்ட தமிழ்மக்கள் - தமிழீழத் தேசி யத்தலைவர் வே.பிரபாகரனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அம்பாறை மாவட்ட தமிழர் மேம்பாட்டுப் பேரவை, அம்பாறை மாவட்ட கடற் (12 ஆம் பக்கம் பார்க்க)

# லண்டன் குண்டுவெடிப்பின் பின்னர் யாழ்ப்பாண யுவதியை காணவில்லை!



லண்டன் —

லண்டனில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 26 வயதான யுவதியொருவர் காணாமற் போயுள்ளார்.

சஹூஜா பரதசங்கரி என்ற இந்த யுவதி சம்பவதினம் காலை 8.15 மணியளவில் வேலைக்குப் புறப்பட்டுச் சென்றதாகவும் - இவர் ஹல்ஸ்டனில் இருந்து சுரங்க ரயில் மூலம் பயணம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

ஆனால் இவர் அலுவலகத்தை (12 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த சில நாட்களுக்குள் ஜான் பீற்றர்சன் வருகிறார்!

கொழும்பு —

அடுத்த சில நாட்களுக்குள் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் இலங்கைக்கு வந்து அரச மற்றும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமது போராளிகளின் பயணங்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதத்தை அரசு வழங்கவேண்டுமென - புலிகள் வழங்கியிருந்த இரண்டுவார காலக்கெடு முடிவதற்கு இன்னமும் 5 நாட்களே உள்ளன.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் - இலங்கை (12 ஆம் பக்கம் பார்க்க)

# நான்கு பேரின் சடலங்களுடன் கொழும்பில் இன்ரகூலர் வாகனம்!



கொழும்பு —

மத்திய மாகாணசபையின் முன்னாள் விவசாயத் துறை அமைச்சர் முஹமட் அமீன் உட்பட நால்வர் கொழும்பில் - லான்ட் குறூசர் வாகனம் ஒன்றில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டனர்.

பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்துக்கு அருகில் கைவிப்பட்ட நிலையில் காணப்பட்ட இன்ரகூலர் வாகனம் ஒன்றை பொலிஸார் சோதனையிட்ட போதே (12 ஆம் பக்கம் பார்க்க)

# அறநெறிப் பாடசாலை மாணவருக்கு நவம்பர் மாதத்தில் இறுதிப் பரீட்சை!

யாழ்ப்பாணம்

அறநெறிப் பாடசாலைகளில் மேற்பிரிவிற் பயிலும் மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை இலங்கைத் திணைக்களத்தால் எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு அறநெறிப் பாடசாலைகளில் மேற்பிரிவில் பத்தாம் தரத்தில் சித்தியெய்தி, பதினோராம் தரத்தில் கல்வியை மேற்கொள்பவர்களும், ஏற்கனவே இந்தப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்தாதவர்களும் தோற்ற முடியும். இந்தப் பரீட்சை நான்கு பாடங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

இந்தப் பரீட்சை தொடர்பான விண்ணப்பப் பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள அறநெறிப் பாடசாலைகளுக்குப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

கடந்த ஆண்டு இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளை அனுப்பாத பாடசாலைகள், பாடசாலையின் பெயர், முகவரி, தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளின் தொகை போன்ற விபரங்களைப் பரீட்சை ஆணையாளர், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை, பெலவத்தை, பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை பரீட்சைத்திணைக்களம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி எதிர்வரும் ஜூலை மாதம் 25 ஆம் திகதி ஆகும். இந்தப் பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்கள், பாடத்திட்டம் என்பன ஜூன் மாதம் 24 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாளர்களும், அதிபர்களும், மாணவர்களை இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க ஊக்குவிக்குமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வேண்டிக்கொண்டுள்ளது.

## சைவ சமய அறிவுப் போட்டி

கோண்டாவில்

கோண்டாவில் வடக்கு திருவருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையமும், கல்வி வளர்ச்சிக் கழகமும் இணைந்து நடத்தும் சைவசமய அறிவுப் போட்டிப் பரீட்சைகள் இன்று காலை 8 மணிக்கு கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் பாலர் வகுப்பு முதல் தரம் 11 வரையான மாணவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (82)

## 2ஆம் தவணைப் பரீட்சை கோட்ட மட்டத்தில்

ஆழியவளை

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவருக்கான இரண்டாம் தவணைப் பரீட்சைகள் கோட்ட மட்டத்தில் நடைபெறுமென வலயக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. பருத்தித்துறை கல்விக் கோட்டம், கரவெட்டி கல்விக் கோட்டம், மருதங்கேணி கல்விக் கோட்டம் என்பன பரீட்சைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. (122)

## கொழும்புத்துறையில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்

கொழும்புத்துறைப் பகுதி மக்களுக்கான சுயதொழில் கடன் வழங்குவது குறித்த நடமாடும் சேவை நாளை காலை 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலயத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பற்றிக் டிறன்ஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## நிர்வாக சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம்

அகில இலங்கை அஞ்சல் தந்தி தொடர்புகள் சேவையாளர் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு சங்கத்தின் தலைவர் ப. உதயகுமார் தலைமையில் யாழ். அஞ்சல் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.


## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

05-07-2005 செவ்வாய்க்கிழமையன்று முகமாலைக்கும் - யாழ்ப்பாணத்துக்குமிடையே பயணிக்கும்போது வி.கோபிநாத் ஆகிய எனது கடவுச்சீட்டும், சிறு தொகைப் பணமும் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். வி.கோபிநாத், 192/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.தொலைபேசி:-0214590382 (C/1979)

### ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

Pandit Nara Semanaidu
World Expert Astrologer

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P- 0779122836
நேரம்:காலை9.00 - 8.30 வரை.(1198)



நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜினி, கௌதமி நடித்த
தர்மதுரை

பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயசாந்தி, சுஜாத்தா, லக்ஷ்மி நடித்த
சூர்யா

காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல் நடித்த

சந்திரமுகி
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30


[illegible] யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
சத்தியராஜ், சுனிதாவர்மா வடிவேல் நடித்த
6'2"

வெகு விரைவில் அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த
சின்னா
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
3 ஆவது ஜனத்திரள் வாரமாக
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி,சார்லி ஆகியோரின் சிறந்த நடிப்பில்
அந்நியன்
anniyan

இசை:- ஹரிஸ் ஜெயராஜ்
இயக்கம்:-சங்கர்
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30


# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பார்த்திப வருஷ காம்யோற்ஸவ விஞ்ஞாபனம் - 2005



சாந்தமும் சீலமும் தனிப்பெரு வாய்மையுந் தாங்கி நல்லறம் புரிந்து ஞாலம் நலம் பெற வேண்டுமென்ற சிந்தனைகளோடு வாழும் எமது அன்பிற்கினிய சைவச் சான்றோர்களே, நீவீர் அனைவரும் நீடூழி வாழ்வீர்களாக என ஆசீர்வதிக்கின்றேன்.

மாருதப்புரவல்லியின் மாவிட்டபுரம் கந்தசுவாமியாரது காம்யோற்ஸவங்கள் பார்த்திப வருடம் ஆனி மாதம் 27 ஆம் நாள் (11.07.2005) திங்கட்கிழமை ஆரம்பமாகி, ஆடி மாதம் 20 ஆம் நாள் (04.08.2005) வியாழக்கிழமை ஆடி அமாவாசையோடு பூர்த்தியாகும்.

*சிவந்தகாலும் தண்டையுமுடைய பெருமானும், அயிலும் மயிலும் அறமும் நிறமும் அழகுமுடைய பெருமானும், அடியேற்றி அவர் முடிசூட்டவல்ல அடியார்க்கு நல்ல பெருமானும், மரகத மயூரப் பெருமானுமான மாவைக்கந்தனது*

உற்சவங்கள் இருபத்தைந்து தினங்களாக இடம்பெறும்போது தினமும் ஸ்னபனாபிஷேகம், அலங்கார பூசைகள், ஆராதனைகள், பிரார்த்தனைகள், திருமுறை ஓதுதல், சுவாமி வீதிப்பிரதட்சினம், மகேஸ்வரபூசை என்பவற்றோடு நிகழ அருள்பாலித்துள்ளது. அருணகிரிநாத சுவாமிகளின் திருப்புகழ் கானாமிர்தங்களோடு ஷண்முகார்ச்சனைகளும் நிகழும்.

## விசேஷ தினங்கள்

ஆனி 31 ஆம் நாள் (15.07.2005) வெள்ளிக்கிழமை 5 ஆம் திருநாளில் நண்பகல் 11.00 மணியளவில் ஷண்முகப்பெருமானின் திருநடனமும்,
ஆடி 14 ஆம் நாள் (29.07.2005) வெள்ளிக்கிழமை 19 ஆம் திருநாளில் ஆடிக் கிருத்திகை விழாவும்,
ஆடி 19 ஆம் நாள் (03.08.2005) புதன்கிழமை 24 ஆம் திருநாளில் ரதோற்சவமும்,
ஆடி 20 ஆம் நாள் (04.08.2005) வியாழக்கிழமை
25 ஆம் திருநாளில் ஆடி அமாவாசைத் தீர்த்த விழாவும்,
தெய்வீகமாக நிகழ தெய்வானுகூலம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இங்ஙனம்
மஹாராஜாஸ்ரீ
சு.து.ஷண்முகநாதக்குருக்கள்
மாவையாதீனகர்த்தா – பிரதமகுரு.

(C/1978)

# பருத்தித்துறை பிரதேச சபை கேள்வி அறிவித்தல் -2005

அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள 1 - 19 வரையான வேலைகளை நிறைவேற்றுவதற்கு இக்ராட் பதிவுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் 7-20 வரையுள்ள வேலைகளுக்கு எமது பிரதேசசபை எல்லைக்குள் சீராகச் செயற்படுகின்றதும்,அங்கீகரிக்கப்பட்டதும், நிதிவளம் கொண்டதுமான பொது அமைப்புக்களிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன.

படிவ விநியோகம் :- 11-07-2005 முற்பகல் 10.00 மணி முதல்
படிவம் ஏற்றல் :- 25-07-2005 பிற்பகல் 02.00 மணி வரை
படிவம் திறத்தல் :- 27-07-2005 பிற்பகல் 02.00 மணிக்கு

கேள்விகள் யாவும்அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு செயலாளர், பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமோ அல்லது சபையிலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விபரம் | மீளளிக்கூடிய கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் | வற்வரி |
|---|---|---|---|
| 1.குரும்பைசிட்டி வீதி புனரமைப்பு | 6250 | 300 | 45 |
| 2.வேதக்குளம் வீதி மீள் புனரமைப்பு | 3675 | 300 | 45 |
| 3.கேவில் நித்தியவெட்டைவீதி மீள் புனரமைப்பு | 5625 | 300 | 45 |
| 4.நீர்த்தாங்கியும், மலசலகூடமும் புனரமைத்தல், மருதங்கேணி | 3200 | 300 | 45 |
| 5.நீர்த்தாங்கியும், மலசலகூடமும் புனரமைத்தல், மந்திகை | 3300 | 300 | 45 |
| 6.பொதுநூலகம் திருத்தம், புலோலி | 1000 | 300 | 45 |
| 7.பொதுக் கிணறு திருத்தம், வல்லிபுரம் | 250 | 100 | 15 |
| 8.பொதுக் கிணறு திருத்தம், மாயக்கை சந்தை | 250 | 100 | 15 |
| 9.பொதுக் கிணறு திருத்தம்,காந்தியூர் | 250 | 100 | 15 |
| 10.பொதுக் கிணறு திருத்தம், விளாப்புகூடல், அல்வாய் மேற்கு | 250 | 100 | 15 |
| 11.பொதுக் கிணறு திருத்தம்,ஜோசப்சேர்ச் | 250 | 100 | 15 |
| 12.பொதுக் கிணறு திருத்தம், வண்ணான் கலட்டி | 250 | 100 | 15 |
| 13.பொதுக் கிணறு திருத்தம்,கற்கோவளம் | 250 | 100 | 15 |
| 14.பொதுக் கிணறு திருத்தம்,பொலிகண்டி | 250 | 100 | 15 |
| 15.பொதுக் கிணறு திருத்தம், மானான்டி சந்தை | 250 | 100 | 15 |
| 16.பொதுக் கிணறு திருத்தம், சிங்கைநகர் | 250 | 100 | 15 |
| 17.பொதுக் கிணறு திருத்தம், சிறிலங்கா பாடசாலை | 250 | 100 | 15 |
| 18.பொதுக் கிணறு திருத்தம், கருகம்பன் கொலணி | 250 | 100 | 15 |
| 19.பொதுக் கிணறு திருத்தம், குரும்பசிட்டி | 250 | 100 | 15 |

*பருத்தித்துறை பிரதேச சபை,*
*தலைமை அலுவலகம்,*
*புலோலி.*
*07-07-2005* (C/4276)

சிதம்பரப்பிள்ளை பசுபதி
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை.

## விடைத்தாள் திருத்தும் பணியை புறக்கணிக்கப்போவதாக ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை!

கொழும்பு—

நாடு முழுவதும் இரண்டு லட்சம் வரையிலான ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் உட்பட்ட , தீர்க்கப்படாத பல பிரச்சினைகளுக்கு அரசாங்கம் விரைவில் தீர்வு காணாவிட்டால், எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள்களைத் திருத்தும் பணியிலிருந்து விலகிக்கொள்ளப் போவதாக லங்கா குருசேவா சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக எதிர்வரும் 13 ஆம் திகதி 10 ஆயிரம் ஆசிரியர்களின் பங்களிப்புடன் கல்வியமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இந்தத் தொழிற்சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

தமது தொழிற்சங்க செயற்பாடுகள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கும் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (தே)

## ஐ.தே.கட்சியின் பேரணியை கண்டு ஜே.வி.பி.குழப்பமடைந்துள்ளது!

### ரவி கருணாநாயக்க எம்.பி.

கொழும்பு—



ஐக்கிய தேசியக் கட்சி நடத்தும் மக்கள் சக்தி பேரணியின் வெற்றியைக் கண்டு, ஜே.வி.பியினர் பதற்றம் அடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்ட போதிலும், அது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை. எமது மக்கள்சக்தி நடவடிக்கையின் வெற்றியைக் கண்டு ஜே.வி.பியினர் குழப்பமடைந்துள்ளனர்.

எமது இந்த நடவடிக்கையில் லட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டுவருகின்றனர்.

அவர்கள் நடத்தும் கூட்டங்களுக்கு மக்கள் செல்வதில்லை. இதனைக் கண்டு அவர்கள் கிலிகொண்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## என்.ரி.ரி செய்தியாளரை கொலை செய்ய இராணுவப் புலனாய்வாளர்கள் முயற்சி!

### மக்கள் திரண்டதில் தோல்வி

அம்பாறை—

அம்பாறையில் தமிழ்த்தேசியத் தொலைக்காட்சி செய்தியாளர் ஒருவரைக் கடத்திச்சென்று, கொலைசெய்ய இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட முயற்சி மக்கள் திரண்டதால், தோல்வியில் முடிந்தது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் அம்பாறையில் வைத்து தமிழ்த்தேசியத் தொலைக்காட்சி செய்தியாளர் வெற்றிக்குமரனைக் கைதுசெய்து, கைகளைக் கட்டிவிட்டு, சுட்டுக்கொல்வதற்கு இராணுவ புலனாய்வுப் பிரிவினர் முயன்றனர்.

அந்தவேளை அங்கு கூடிய மக்கள் கூக்குரலிடவே அவரைத் தூக்கிச்சென்று வாகனமொன்றில் ஏற்றிக் கடத்திச்செல்ல முற்பட்டனர். எனினும், குறித்த செய்தியாளர் அவர்களிடம் இருந்து தப்பி ஓடிவிட்டார்.

அந்தவேளை அவரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இருந்தபோதிலும் அவர் அதிலிருந்தும் தப்பிச்சென்று, அம்பாறை அரசியற்துறை அலுவலகத்தில் தஞ்சமடைந்தார்.

கடந்த சில நாட்களாக விசேட அதிரடிப்படையினர் அம்பாறையில் உள்ள தமிழ்த்தேசியத் தொலைக்காட்சியின் செய்தியாளர்கள் தங்கியுள்ள வீட்டை தமண பகுதியில் இருந்து கொண்டு வரப்படும் பொலிஸ் புலனாய்வாளர்களுடன் இணைந்து நோட்டமிட்டு வந்துள்ளனர். அம்பாறைக்கு முற்றிலும் புதியவர்களான இந்தப் புலனாய்வாளர்கள் அரசியல் பிரமுகர்கள் பயன்படுத்தும் வாகனங்களிலேயே உலாவுகின்றனர். இவ்வாறு வரும் புலனாய்வாளர்கள் அண்மை நாட்களில் அங்கு தங்கியுள்ளவர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டி வந்ததாகவும் தெரியவருகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு குறித்த செய்தியாளர் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்றிருந்த கொச்சைத் தமிழில் பேசிய சிலர், தம்மை கருணா குழுவைச் சேர்ந்தவர்களென்றும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களைக் கொலைசெய்யப் போவதாகவும் கூறியே வெற்றிக்குமரனைக் கடத்திச் செல்ல முற்பட்டனர்.

இதிலிருந்து வெற்றிக்குமரன் தப்பியதை யடுத்து, அங்கிருந்த இன்னொரு இளைஞரை வாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டுத் தப்பிச் சென்றனர்.

## ஊடகவியலாளர் சிவராம் கொலை விசாரணைகளில் புதிய திருப்பங்கள்

கொழும்பு—

ஊடகவியலாளர் சிவராமின் கொலை விசாரணைகளில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளதாகக் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சரத் லூகொட தெரிவித்தார்.

கொலையுடன் சம்பந்தப்பட்ட மேலும் இருவரின் வாக்கு மூலம் தற்போது பெறப்பட்டுள்ளதாகக் கூறிய சரத் லூகொட - அவர்களின் பெயர் விபரங்களை வெளியிட மறுத்துவிட்டார். அந்த இருவரும் சமுதாயத்தில் பிரபல்யமான முக்கியஸ்தர்கள் எனக் கூறிய அவர், இன்னும் இரு தினங்களில் சிவராமின் படுகொலை தொடர்பாக விசாரணையின் முதல் அறிக்கை பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைக்கப்படும்.

அதன் பின்னர் சிவராம் படுகொலையின் புதிய திருப்பங்கள் தொடர்பான விபரங்கள் அறிவிக்கப்படும்.

ஊடகவியலாளர் சிவராம் கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி இரவு 10.15 மணியளவில் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வைத்துக் கடத்திச் செல்லப்பட்டு, மறுநாள் அதிகாலை நாடாளுமன்றத்துக்கு அருகில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்—

லண்டனில் வசிக்கும் டொக்டர் சிசிக்காந் என்பவர் - பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துவ உபகரணங்கள், மருந்துப் பொருட்கள் என்பவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இவற்றுள் குளிர்சாதனப் பெட்டிகள், இரத்த அழுத்தத்தைப் பரிசோதிக்கும் கருவிகள் உட்பட நவீன உபகரணங்களும், பெறுமதியான மருந்துப் பொருட்களும் உள்ளடங்கியுள்ளன.

## அடுத்த ஆண்டு நவம்பருக்கு முன் ஜனாதிபதித் தேர்தலை நடத்த எவருக்கும் அதிகாரமில்லை!

### நிமால் சிறிபால டி சில்வா

கொழும்பு—

அரசியலமைப்பின்படி இந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குரிய அதிகாரம் ஜனாதிபதிக்கோ, தேர்தல் ஆணையாளருக்கோ கிடையாது.

எனவே உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தக்கோரி பேரணிகளை நடத்துவதில் எந்த அர்த்தமும் இல்லையென்று அரசாங்கத்தின் புதிய ஊடகப் பேச்சாளர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

அடுத்தாண்டு நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறமாட்டாது. இரண்டாவது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதிக்குக்கூட அதிகாரம் கிடையாது.

தேர்தல் ஆணையாளருக்கு மாத்திரமே இந்த அதிகாரம் உண்டு. இதனால் அரசியல் யாப்புப்படி, அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பின்னரே தேர்தலுக்கு ஏற்பாடு செய்ய முடியும்.

எனவே, ஜனாதிபதித் தேர்தலைக் கோரி ஐக்கிய தேசியக் கட்சி நடத்தும் பேரணியால் எவ்வித பயனும் இல்லை என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார்.

## கிழக்கில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு—

சுனாமி நிவாரண பொதுக்கட்டமைப்பு மீளாய்வு செய்யப்பட்டு, முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு வழங்கப்படவேண்டும் எனக் கோரி - நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் பரவலாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

மாவட்ட அனைத்து பள்ளிவாசல்களின் சம்மேளனத்தால் இந்த ஆர்ப்பாட்டங்கள் 23 ஜும்மா பள்ளிவாசல்கள் முன்பாக நடைபெற்றன.

நேற்று முன்தினம் நண்பகல் ஜும்மாத் தொழுகையின் பின்பு பள்ளிவாசல்கள் முன்பாகக் கூடிய முஸ்லிம்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முஸ்லிம்களுக்கான தனித்தரப்பு வழங்கப்படாது விட்டால், எந்தவொரு முஸ்லிம் கட்சியும் பொதுக்கட்டமைப்புக்கு பிரதிநிதிகளை சிபாரிசு செய்யக் கூடாது என்றும், ஆர்ப்பாட்டக்காரர்களால் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருந்தது.

## பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் மக்கள் சந்திப்புகள்; தேசப்பற்றுள்ள இயக்கம் நடவடிக்கை!

கொழும்பு—

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நாடு முழுவதும் மக்கள் சந்திப்புக்களை நடத்தவுள்ளது.

அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட பொதுக்கட்டமைப்பினால் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமை மற்றும் நாட்டின் எதிர்கால செயற்திட்டங்கள் தொடர்பான விடயங்களை அடிப்படையாக வைத்து, இந்த மக்கள் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி நுகேகொடையிலும், 20 ஆம் திகதி கண்டியிலும், 24 ஆம் திகதி ஹொறணையிலும் இந்த மக்கள் சந்திப்பு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர்களான எல்லே குணவன்ச தேரர், விமல் வீரவன்ச, குணதாச அமரசேகர, பேராசிரியர் நளின்டிசில்வா, சட்டத்தரணி எஸ்.எல். குணசேகர, கலாநிதி பியசேன திஸநாயக்க ஆகியோர் இந்தச் சந்திப்புகளில் கலந்து கொள்ளவுள்ளனர். (தே)

## முஸ்லிம் பிரதிநிதிகளை தெரிவு செய்ய முடியாது

### முஸ்லிம் காங்கிரஸ்

கொழும்பு—

சுனாமி நிவாரண சபையின் கீழ் நியமிக்கப்படும் குழுக்களுக்கு எந்தவொரு முஸ்லிம் பிரதிநிதிகளையும் நியமிப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இடம் வழங்கமாட்டாதென அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ஹசன் தெரிவித்தார்.

இதற்கு எதிராக முஸ்லிம் மக்களை அணிதிரட்டுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கை எடுத்துவருகிறது.

சுனாமி நிவாரண சபையின் கீழ் அரசு, முஸ்லிம் பிரதிநிதிகளை நியமித்தால், அவர்களுக்கு அந்தக் குழுக்களில் வேலைசெய்ய இடம் வழங்கமாட்டோம்.

முஸ்லிம்களுக்கு அநீதியான இந்தச் சபையின் நடவடிக்கைகளிலிருந்து விலகிக் கொள்ளுமாறு அழுத்தம் கொடுக்கப்போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய அணி வீரர்களுக்கு இலங்கையில் கடும் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை!



கொழும்பு —

இலங்கையில் முத்தரப்பு கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் இலங்கை, இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய 3 அணிகள் பங்கேற்கவுள்ளன. இந்தப் போட்டிக்காக இந்திய வீரர்கள் பெங்களூர் பயிற்சி முகாமில் தீவிர பயிற்சி மேற்கொண்டுவருகிறார்கள்.

மேற்கிந்திய அணி வீரர்கள் ஏற்கனவே கப்டன் சந்தர்போல் தலைமையில் கொழும்பு வந்துள்ளனர். அவர்கள் கொழும்பு நகரில் தங்கியிருந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் எந்த நேரத்தில் போர்நிறுத்தம் ரத்தாகி மோதல் வெடிக்குமோ என்ற பதற்றநிலை உள்ளதால், இலங்கைக்கு வரும் இந்திய அணிக்கு கடுமையான பாதுகாப்பு தேவை என்று இந்திய அரசு கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்காக இந்திய வெளியுறவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் குழு இலங்கைக்கு வரவுள்ளது.

இந்த அதிகாரிகள் முத்தரப்பு கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ள கொழும்பு நகருக்கும், தம்புள்ள நகருக்கும் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகள் எப்படி இருக்கிறது என்று ஆய்வு செய்வார்கள். இந்திய வீரர்களுக்கு பாதுகாப்பை கடுமையாக்குவதற்குரிய நடவடிக்கைகளை இலங்கை நாட்டு அதிகாரிகளுடன் கலந்துபேசி எடுப்பார்கள்.

முத்தரப்பு கிரிக்கெட் போட்டியை அமைதியாக நடத்தமுடியும் என்று நம்புகிறோம். ஆனாலும் இந்திய அரசு விரும்பும் அளவுக்கு அதிக பாதுகாப்பு ஏற்படுத்தவுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## அஸ்ரா கிண்ண கிரிக்கெட்

# சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை யாழ்.மத்திய கல்லூரி வீழ்த்தியது!

யாழ்ப்பாணம் —

பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணிகளிடையே நடைபெற்றுவரும் அஸ்ரா கிண்ண கிரிக்கெட் போட்டியின் முதல்சுற்று ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை யாழ்.மத்திய கல்லூரி அணி முதலாம் இனிங்ஸ் ஓட்ட வித்தியாச அடிப்படையில் வெற்றிபெற்றது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியின் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி யாழ்.மத்திய கல்லூரியின் அபார பந்துவீச்சினால் 60.4 ஓவர்களைச் சந்தித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

இதில் நிலோசன் 55 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். ஏனைய வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணியின் சார்பில் ஸ்ரீபன்ராஜ் 3, மயூரன் 2, சிவகரன் 2, கோபிகன் 2, ரதீசன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியிருந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 40 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்று இந்தப் போட்டியில் முதல் இனிங்ஸ் வெற்றிக்குரிய புள்ளியைப் பெற்றுக் கொண்டது.

இதில் ஜேம்ஸ் ஜோன்சன் 31, ரதீசன் ஆட்டமிழக்காமல் 27, மயூரன் 23, ஸ்ரீபன்ராஜ் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.பற்றிக்ஸ் அணியின் சார்பில் கஜமுகன், மிலாண்டோ ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களையும், காத்தீசன், லவதீசன், றொபேட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (58)

# ஆசிய - ஆபிரிக்க கிரிக்கெட் போட்டிக்கு சர்வதேச கிரிக்கெட் சபை அங்கீகாரம்!

லண்டன் —

ஆபிரிக்க மற்றும் ஆசிய லெவன் அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடருக்கு சர்வதேச கிரிக்கெட் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விளையாட்டு உணர்வுகளை வளர்க்கும் வகையில், ஆபிரிக்க மற்றும் ஆசிய கண்டங்களைச் சேர்ந்த அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் சமீபத்தில் நடத்தப்பட்டன. இதன் அடுத்தகட்டமாக, இவ்விரு கண்டங்களில் உள்ள கிரிக்கெட் அணிகளுக்கிடையே போட்டி நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் அடங்கிய ஆபிரிக்க லெவன் மற்றும் ஆசிய அணிகளைச் சேர்ந்த வீரர்கள் அடங்கிய ஆசிய லெவன் அணிகளுக்கிடையே மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்தமாதம் 17, 19 மற்றும் 21 ஆகிய திகதிகளில் இந்தப் போட்டிகள் நடைபெறும். போட்டிகள் நடக்கும் இடம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

இந்தத் தொடருக்கு சர்வதேச கிரிக்கெட் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## விளையாட்டு

# மோசமான படுதோல்வியால் சோகத்தில் ரிக்கி பொண்டிங்!

லீட்ஸ்

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் கிடைத்த படுதோல்வியால் அவுஸ்ரேலிய கப்டன் ரிக்கி பொண்டிங் அதிர்ச்சியடைந்துள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி, இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்துள்ளது. அவர்களுக்கு அங்கு கிடைக்கும் முடிவுகள் அவ்வளவு திருப்தியாக இல்லை. வரிசையாக வெற்றி பெற்றுவந்த அந்த அணி இங்கிலாந்து மண்ணில் நிறையத் தோல்விகளைச் சந்தித்தது.


இவ்விரு அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் ஹெடிங்லேயில் நடந்த முதல் போட்டியில் இங்கிலாந்து ஒன்பது விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்ரேலியாவை நொருக்கித் தள்ளியது. 1:0 என்று முன்னிலையும் பெற்றது. இவ்விரு அணிகளுக்கிடையே இதுவரை நடந்த 83 ஒருநாள் போட்டிகளில், இவ்வளவு அபார வெற்றி இங்கிலாந்து பெறுவது இதுவே முதல்முறை.

சாதனை வெற்றியால் இங்கிலாந்து கப்டன் மைக்கல் வோன் பெரும் சந்தோஷத்தில் இருக்கிறார். மிக அதிகம் எதிர்பார்க்கப்படும் ஆஷஸ் டெஸ்ட் தொடர் எதிர்வரும் 21இல் தொடங்குகிறது. ஐந்து போட்டிகள் கொண்ட இந்தத் தொடரிலும் இங்கிலாந்து அணி ஆதிக்கம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுபற்றி மைக்கல் வோன் கூறுகையில் -

இந்த வெற்றி எங்களுக்கு புதிய தன்னம்பிக்கை, ஊக்கமளிக்கிறது. ஆனாலும், ஒரு வெற்றியை மட்டும் வைத்துக் கொண்டு, ஆஷஸ் டெஸ்ட் தொடர் முடிவை கணித்துவிட முடியாது. அவுஸ்ரேலியா போன்ற வலுவான அணிக்கு எதிராக கிடைத்த அபார வெற்றி எங்கள் வீரர்களை உற்சாகப்படுத்தியுள்ளது. தொடரின் எஞ்சிய இரு போட்டிகளிலும் திறமை காட்ட அவர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள் என்றார்.

படுதோல்வியால் அவுஸ்ரேலிய கப்டன் ரிக்கி பொண்டிங் படுசோகமாக இருக்கிறார். ஒருநாள் போட்டியில் நான் விளையாடிய மிகச் சவாலான ஆடுகளம் இதுதான். முதல் பாதியில் நாங்கள் துடுப்பெடுத்தாடும்போது, பந்துவீச்சுக்கு அபாரமாக ஒத்துழைத்தது. இங்கிலாந்து துடுப்பெடுத்தாடும்போது நிலைமை மாறிவிட்டது. தவிர, எங்கள் பந்துவீச்சாளர்களும் முழுத் திறமை காட்டவில்லை. குறிப்பாக, ஜேசன் ஜிலெஸ்பி தனது இயல்பான பந்துவீச்சை வெளிப்படுத்தவில்லை. அடுத்துவரும் ஆஷஸ் டெஸ்ட் தொடரைக் கருத்திற் கொண்டு, முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அடுத்த போட்டிகளில் ஒய்வளிப்பது பற்றி பரிசீலித்து வருகிறோம் என்றார்.



ஒருநாள் தொடரின் அடுத்த போட்டி லண்டன் லோட்ஸ் மைதானத்தில் இன்றும், கடைசிப் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஓவல் மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

# கே.சி.சி.சி கிண்ண கிரிக்கெட் இன்று நான்கு ஆட்டங்கள்!

யாழ்ப்பாணம் —

கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்துக்காக, கொக்குவில் மத்திய சனசமூகத்தினரால் நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நான்கு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து சென்றல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இதே மைதானத்தில் பிற்பகல் 1 மணிக்கு பற்றீசியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

அதேவேளை, யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது.

இதே மைதானத்தில் பிற்பகல் 1 மணியளவில் நடைபெறும் ஆட்டத்தில் ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

## பல்கலைக்கழக விளையாட்டு போட்டிகளில் புதிய சாதனைகள்!

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டு அவையால் பீடங்களுக்கிடையில் நடத்தப்பட்ட தடகளப் போட்டியில் வணிக முகாமைத்துவ கற்கைகள் பீடம் வெற்றிபெற்றுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் கடந்த 2, 3ஆம் திகதிகளில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பல புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

ஈட்டி எறிதலில் அ.நித்தியா, பி.குகராஜ், முப்பாய்ச்சல், 400 மீற்றர் தடை தாண்டல் போட்டிகளில் தி.வாசுகி, 100 மீற்றர் வேகநடை - எஸ்.ராதிகா, உயரம் பாய்தல் - எ.சந்திரிகா ஆகியோர் புதிய சாதனைகளை நிலைநாட்டினார்கள்.

இந்தத் தடகளப் போட்டியில் 2, 3ஆம் இடங்களை முறையே கலைப்பீடம், விஞ்ஞானபீடம் ஆகியன பெற்றுக்கொண்டன.

## மாதகல் சென்.தோமஸ் உதைபந்தாட்டம்

# சென்.மேரிஸ், கரணவாய் மத்தி அணிகள் நேற்றைய போட்டிகளில் வெற்றிபெற்றன!

மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் சென்.மேரிஸ் (வெள்ளை) அணியும், கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றன.

நேற்றுமாலை 3.30 மணிக்கு ஆரம்பமான சென்.மேரிஸ் (வெள்ளை) மற்றும் மணற்காடு சென்.அன்ரனீஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டம், சென்.மேரிஸ் வீரர்களின் சிறப்பான பந்து நகர்த்தலால் அவ்வணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது.

இந்த அணி வீரர்கள் எதிரணியின் வியூகங்களை உடைத்தெறிந்து கோல்களைப் போட்டதுடன், சிறப்பான தடுப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். இதனால், எதிரணி எவ்வித கோலையும் பெறமுடியாமல் போனது.

இந்த வகையில் ஆட்டம் தொடங்கி 15ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் வீரர் பிரான்ஸிஸ் தனது அணிக்காக முதலாவது கோலைப் போட்டார். அடுத்து 25ஆவது நிமிடத்தில் அஜந்தனும், 45ஆவது நிமிடத்தில் றொனியும், 49ஆவது நிமிடத்தில் அஜந்தனும் கோல்களைப் போட்டு தமது அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர். இறுதியில் சென்.மேரிஸ் (வெள்ளை) அணி 4:0 என்ற கணக்கில் மணற்காடு சென்.அன்ரனிஸை வெற்றி கொண்டது.

மற்றொரு போட்டியில் 4.30 மணிக்கு பாசையூர் அன்ரனிஸை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகம் மோதவிருந்தபோதிலும், பாசையூர் அன்ரனிஸ் சமுகமளிக்காத காரணத்தால் கரணவாய் மத்தி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

## உதைபந்தாட்டப் போட்டி!

தமிழீழ விளையாட்டுத்துறை வலிகாம உதைபந்தாட்ட லீக் ஆதரவில் நமது ஈழநாடு ஊடக அனுசரணையுடன் சுனாமியால் உயிரிழந்த மாதகல் வாழ் பொது மக்களின் ஞாபகார்த்தமாக சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியில் -

இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்.சேவியர் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணியும், 4.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் றோயல் ஏ அணியை எதிர்த்து பொமேர்ஸ் அணியும் மோதவுள்ளன.


## தாச்சிப் போட்டி

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம், தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் -

இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இன்று பிற்பகல் 4 மணிக்கு இணுவில் அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகமும்,

பிற்பகல் 5 மணிக்கு மயிலிட்டி ஜெயந்தன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவற்குழி அருள் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.



சீனாவைச் சேர்ந்த ஷியாங் லியூ (இடது), அமெரிக்காவைச் சேர்ந்த டெரன்ஸ் டிராம்மல் ஆகிய இருவரும் போட்டியிடுவது 110 மீற்றர் தடை ஓட்டத்துக்கான தங்கப் பதக்கத்துக்காகத்தான். இருவருமே 13.05 வினாடிகளில் இலக்கை எட்டி ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபித்தனர். ஆனால் தொழில்நுட்ப அடிப்படையில் தங்கப் பதக்கம் சீன வீரருக்கும், வெள்ளிப் பதக்கம் அமெரிக்க வீரருக்கும் வழங்கப்பட்டது. இந்த ஐ.ஏ.ஏ.எவ் கிராண்ட் பிரீ போட்டி சுவிற்சர்லாந்திலுள்ள லாசேனில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

## கிராமப்புறங்களுக்கு
## மொபிரெல் மூலம் இணைப்புகள் வழங்க ரெலிகொம் நிறுவனம் துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் கேபிள் இணைப்பு இல்லாத இடங்களுக்கு மொபிரெல் மூலம் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளதாக, ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் வடக்குப் பிராந்திய பொறுப்பதிகாரி வி.யோகேந்திரன் தெரிவித்தார்.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் கேபிள் இணைப்புகள் அற்ற கிராமப்புறங்களுக்கு, மொபிரெல்மூலம் தொலைபேசி இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், மொபிரெல் மூலம் தொலைபேசி இணைப்புகள் பெற விரும்புவோர் - ஸ்ரீலங்கா டெலிகொம்மிடம் தொடர்பு கொண்டால், ஒரு மாதகாலப் பகுதிக்குள் இணைப்புகள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

வாடிக்கையாளர்களுக்கு மொபிரெல் இணைப்புகள் வழங்குவதை இலகுபடுத்தும் வகையில், ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் யாழ். பிராந்திய அலுவலகத்தில், மொபிரெல் காரியாலயம் மிக விரைவில் திறக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போது கேபிள் இணைப்பு இல்லாத சாவகச்சேரி, கொடிகாமம், சித்தங்கேணி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் கேபிள் இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இதனால் இந்தப் பகுதிகளில் மோட்டோறோலா மூலம் இணைப்புப் பெற்றுள்ள வாடிக்கையாளர்கள் இதன் மூலம் நன்மை பெறமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விபத்தில் சிறுவன் காயம்

கொக்குவில் —

வீதியைக் கடக்க முற்பட்ட போது மோட்டார் சைக்கிளுடன் மோதி படுகாயமடைந்த நிலையில், சிறுவன் ஒருவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 4.40 மணிக்கு பொற்பதி வீதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் - அதே இடத்தைச் சேர்ந்த கே.அமில்ராஜ் (வயது 10) என்ற சிறுவனே தலையிலும், கால்களிலும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவதினம் வீட்டுக்கு அருகில் உள்ள கடைக்குச் சென்றுகொண்டிருந்தபோதே, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதால் இந்தச் சம் பவம் இடம்பெற்றது.

## தென்மராட்சியில் வீட்டுத் திட்ட பயனாளிகள் தெரிவில் முறைகேடு

சாவகச்சேரி —

தென்மராட்சிப் பிரதேசத்தில் முதற்கட்டமாக அமுல் செய்யப்படவுள்ள உலக வங்கியின் வீட்டுத்திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட முறை குறித்து மக்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவில் - கொட்டில் வீடுகளிலும், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்துவரும் வறுமைக்கோட்டுக்குட்பட்டவர்களுக்கு உரிய இடங்கள் வழங்கப்படவில்லை.

இதேவேளை, வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் வெளிநாடுகளில் பிள்ளைகள் இருக்கும் குடும்பங்களும், அதிகரித்த வருமானம் உடையவர்களும் தெரிவாகியிருப்பதாகவும், அந்தப் பகுதி பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.



இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இகவை மூன்று

பெயர் : பா.சாருஜா

முகவரி : மல்லாகம்.



வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் ----------------------------

முகவரி ----------------------------

பிறந்த ஆண்டு ----------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------------------

பெற்றோர் ஒப்பம்

## மஹா கும்பாபிஷேகம்

தெல்லிப்பளை —

தெல்லிப்பளை துர்க்காபுரம் தோதரை அருள்மிகு ராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் 6.45 வரை நடைபெறவுள்ளது. (72)

## எச்சரிக்கை சுவரொட்டிகள்

சாவகச்சேரி —

அனுமதி பெற்ற கள்ளுத் தவறணைகள் தவிர, ஏனைய இடங்களில் கள் விற்பனை செய்வதும், கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை என்பவற்றில் ஈடுபடுவதும் தண்டனைக்குரிய குற்றங்களாகும் என, சமூக விழிப்புணர்வுக் குழு என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தென்மராட்சியின் பல பாகங்களிலும் ஒட்டப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிகளின் எச்சரிக்கையை மீறுபவர்களுக்கு, கடுமையான தண்டனை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது!

யாழ்ப்பாணம் —

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தில் - புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு தகுதி உடையவர்களைத் தெரிவுசெய்யும் வகையில், போட்டிப் பரீட்சைக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் கல்வித் தகைமையாக - புள்ளிவிபரம், கணிதம், பொருளியல், மக்களியல், புவியியல், கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் அல்லது சமூகவியல் பாடங்களில் ஒரு பாடத்துக்காவது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முதலாம் தரச்சித்தியுடன் சிறப்புப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

எனவே, உள்நாட்டு விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னரும், வெளிநாட்டு விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் ஓகஸ்ட் 17 ஆம் திகதிக்கு முன்னரும் கிடைக்கக்கூடியதாக - 'பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்திரமுல்ல' என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கும்படியும், அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் - 'புள்ளிவிபரவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை' எனக் குறிப்பிடுதல் வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தப்படும், இதற்கான வயதெல்லை 18 தொடக்கம் 45 வருடத்துக்குள் இருக்க வேண்டும்.

இந்தப் பதவிக்கான 80 வீதமான வெற்றிடங்கள் -உள்ளக ஆட்சேர்ப்பின் ஊடாகவும், 20 வீதமான வெற்றிடங்கள் வெளியக ஆட்சேர்ப்பின் ஊடாகவும் நிரப்பப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

## இடமாற்றங்கள்

சாவகச்சேரி —

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் - உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய கே.குணபாலசிங்கம், தொழில்நுட்ப அலுவலராகக் கடமையாற்றிய ரி.பாக்கியலிங்கம் ஆகியோர் எதிர்வரும் 1 ஆம் திகதி முதல் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் புதிய உதவித் திட்டமிடல் பணிப்பாளராக உடுவில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் ஆர்.இரகுநாதன் இடமாற்றப்பட்டுள்ளார். (24)

◆◆◆

சுதுமலை —

வலிகாமம் மேற்கு சுழிபுரம் பிரதேசசபைக்கு புதிய செயலாளராக இ.இராசதுரை கடந்த முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் வலிகாமம் கிழக்கு நீர்வேலி பிரதேச சபையில் செயலாளராகக் கடமையாற்றினார்.

வலி.மேற்கு சுழிபுரம் பிரதேசசபையில் செயலாளராகக் கடமையாற்றிய புஸ்பமலர் சிவலிங்கம் தற்போது பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கு மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (91)

## ஓய்வூதிய அலுவலர்கள் நியமனம்

மட்டுவில் —

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதிய அலுவலர் பதவிக்கு 15 பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டச் செயலகம் மூலம் நியமனக் கடிதத்தைப் பெற்ற இவர்கள் - எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் ஓய்வூதியத் திணைக்களத்தில் தமது கடமையைப் பொறுப்பேற்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தாம் கடமையாற்ற விரும்பும் அலுவலகம் சம்பந்தமான தமது விருப்பத் தேர்வைத் தெரிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (24)

## சிறுமியை வல்லுறவுக்குட்படுத்தியவருக்கு பத்து வருட கடூழியச் சிறைத்தண்டனை!

அனலைதீவு —

அனலைதீவில் பதினாறு வயதுக்குட்பட்ட சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய ஒருவருக்கு, 10 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், அனலைதீவில் பதினாறுவயதுக்குட்பட்ட சிறுமியை அனலைதீவைச் சேர்ந்த நல்லதம்பி கோவிந்தவிஜே என்பவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார் எனத்தெரிவித்து, அவருக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு - யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, விசாரணை முடிவில் இந்த நபரைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி - அவருக்குப் பத்து வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

இதைவிட எதிரி தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கும் வகையில், அவரை இரண்டு வாரங்கள் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கவேண்டும் எனவும், அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் மேல் முறையீடு செய்து, மேல் நீதிமன்றத்தில் பிணை மனு சமர்ப்பித்தால், அவரது பிணை மனு பரீசீலிக்கப்படும் எனவும் நீதிபதி தெரிவித்தார் .

## கற்பித்தல் சாதன உருவாக்கப்போட்டி

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்திலுள்ள ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதன உருவாக்கப்போட்டி ஒன்றை - யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி எதிர்வரும் 21 ஆம் திகதி நடத்தவுள்ளது.

இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதுடன், தகுதியானவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் சேவையாற்றும் அனைத்து ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

மேலும் வலய மட்டத்தில் 1 ஆம் இடத்தைப் பெறும் ஆசிரியர்களுக்கு சிறப்புக் கேடயமும், சான்றிதழ்களும் வழங்கப்படும். அத்தோடு 2, 3 ஆம் இடத்தைப் பெறும் ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.





சுண்டுக்குளி மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இந்த உதை போதுமா?



# விளையாட்டு அரங்கம்

கொன்பெடரேசன் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் கிண்ணத்தைச் சுவீகரித்தது பிரேஸில். ஜேர்மனியில் நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் சந்தித்துக் கொண்டவை இரண்டும் தென் அமெரிக்க நாடுகள். ஆர்ஜென்ரீனாவைப்பொறுத்த வரை உலகக் கிண்ணத்தகுதிச் சுற்றுப் போட்டியொன்றில் பிரேசிலை 3-1 என்று தோல்வியுறச் செய்திருந்தது. இப்பொழுது நிலைமையைத் தலைகீழாக்கி, ஒரு படி மேலேயும் போய் 4-1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனாவைக் கவிழ்த்திருக்கிறது பிரேசில். முடிந்துபோன இறுதியாட்டம் இலங்கை நேரப்படி நள்ளிரவு 12 முதல் அதிகாலை 3 மணிவரை நடைபெற்றிருக்கிறது. இந்த ஆட்டத்தை ESPN, STAR SPORTS ஒளிபரப்பில் பார்த்தவர்கள் அவை அற்புதமான மணித்துளிகள் என்கிறார்கள்.



றொனால்டின்ஹோ இடி

பிரேசில் அணியின் ஆட்டம் முன்னாள் பிரபல்ய வீரர்கள் பீலே, சீக்கோ, கரின்கா போன்றோரை ஞாபகப்படுத்தியதாகக் கூறுகிறார்கள்.

ஒரு ரசிகர் கருத்துக் கூறும் போது– எந்த நிலைக்குரிய வீரரும் மிக ஆக்ரோஷமாக எதிரணி கோல் கம்பங்களைத் தாக்கும் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருப்பதை எடுத்துக் காட்டுகிறார். குறிப்பாக றொனால்டின்ஹோ, அட்ரியானோ, காகா ஆகியோரின் பந்துக்கட்டுப்பாடு, பரஸ்பரம் பந்தைச் செலுத்துதல், கொண்டு செல்லல் என்பவை எல்லாம் அற்புதம் நிகழ்வதைப் பார்ப்பது போல இருந்தது என்கிறார். இதில் இன்னொரு குறிப்பையும் சேர்த்துக்கொள்ள வேண்டும், அதாவது றொனால்டோ, றொபேட்டோ கார்லொஸ் இருவரும் அணியில் இல்லாமலே ஆர்ஜென்ரீனாவை இந்த உலுப்பு உலுப்பிவிட்டார்களே என்று வியந்து போகிறார்கள்.

இந்த இறுதி ஆட்டத்தில் போடப்பட்ட நான்கு கோல்களில் இரண்டை அட்ரியானோ போட, றொனால்டின்ஹோவும், காகாவும் தலா ஒரு கோலைப் போட்டனர். இந்த நான்கு கோல்களும் உலகின் எந்த அதிசிறந்த கோல்காப்பு வீரர்களாலும் தடுத்திருக்கமுடியாது என்று கருத்துக் கூறுகிறார்கள் ரசிகர்கள்.

இறுதியாக சுவையான ஒரு கேள்வியுடன் ஆட்ட ரசிப்புக் குறிப்பை முடித்துக் கொள்கிறார்கள். அதாவது இந்த அணி இந்தத் தரத்தில் விளையாடினால் 2006 உலகக் கிண்ணப் போட்டிகளில் பிரேசில் தேசிய அணியில் றொனால்டோவுக்கும், றொபேட்டோ கார்லொஸுக்கும் இடம் தேடுவது எப்படி என்பதே அது. கேள்வி எப்படி?

- நிர்மலன்.



காகா மின்னல்

# எப்படி இருந்த அணி இப்படியாகியதே

வேதாளம் முருங்கை மரத்தில் ஏறும் கதையை அறியாதவர் யாரும் இல்லை. இலங்கைத் தீவுக்கு மேற்கிந்தியத்தீவுகள் அணி விஜயம் செய்ய ஏற்பாடுகள் செய்யும் போதெல்லாம் ஏதாவது தடை ஏற்படுவது வழக்கம். இம்முறை அப்படி ஏதும் நடந்தால் அது ஐந்தாவது முறையாக இருந்திருக்கும். நல்லவேளை அப்படி நடைபெறவில்லை. இருந்தாலும், வந்தவர்களையும் நின்றவர்களையும் சேர்த்து ஒரு தேசிய அணியாக்கி அரைவேக்காட்டு அணியொன்றை இலங்கையில் களம் இறக்குகிறது மேற்கிந்தியக் கிரிக்கெட் சபை.



சர்வான் துன்பம்

குளறுபடிக்குக் காரணமாக அமைந்தது மேற்கிந்தியக் கத்துக்கும், மேற்கிந்திய கிரிக்கெட் வீரருக்கும் இடை பனவுகள், விளம்பரங்கள் தொடர்பிலான குடுமிப்பிடிச் சண்டை சமாதானமாகும் -முன்னர் நடந்து போடோ- யிருந்தவர்களுக்கு பெரும் ஏமாற்றம். இறுதிவரை டாத முன்னைய வீரர்கள் பலர் மேற்கிந்திய அணியில் எனவே தேசிய அணிக்குப் புதியவர்களை, இலங்கையில் றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் மேற்கிந்தியத் அணியில் இருந்து இழுத்துக்கொள்ள, "A"அணியின் நிரப்ப கரிபியன் பிராந்தியத்தில் இருந்து வீரர்கள் யாகிறார்கள்.

மைகள் தொடர்பான நிகழ்வுகள் மேற்கிந்தியத் தீவுகள் பொறுத்து சகஜமாகப் போய்விட்ட நிலையில், மேற்கிந் கிரிக்கெட் பற்றிய ஞாபகம் படிப்படியாகக் குறைவடைந்து போவது போலத் தெரிகின்றது. மேற்கிந்தியத்தீவுகளின் கூடைப்பந்தாட்டம் என்பன பிரபல்யமாகி வருகின்றன கிரிக்கெட் செய்திகளை விட கூடுதலான கவனத்தைக்

இந்தக் கிரிக்கெட் நிர்வாயிலான கொடுப் சண்டை தான். என்று எண்ணி தீர்வு காணப்ப இல்லை. தற்போது சுற் தீவுகள் "A" இடைவெளி இறக்குமதி

இந்த தன் கிரிக்கெட் தியத் தீவுகள் கொண்டு பேஸ்போல், என்ற செய்திகள் கவர்கின்றன.

இன்னொரு வகையில் சிம்பாப்வே, கென்யா போன்றவற்றுக்கு ஒரு தரர்சு, பங்களாதேஷுக்கு ஒரு தராசு என்று நிறுத்துக் கொண்டிருக்கும் நிலையில் - முழுத்தகுதியோடும் பலத்தோடும் விளையாடத் தயாராகிக்கொண்டிருக்கும் இலங்கை ஏன் தரம் குறைந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் விளையாடச் சம்மதிக்க வேண்டும்? ஏதோ கரிபியன் CLUB ஒன்று இலங்கை வரும் உணர்வு ஏற்படுகிறதே ஒழிய, ஒரு தரம் வாய்ந்த அணியாக இவர்களை ஏற்றுக்கொள்ள மனம் மறுக்கிறது. இன்னொரு வகையில் பார்ப்போமானால் தற்போது இலங்கையில் மேற்கிந்தியத் தீவுகளின் இரண்டு "A" அணிகள் விளையாடிக்கொண்டிருக்கின்றன என்று வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம்.



சுமைகள் அதிகம்

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் புதிதாக எட்டுப் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சேவியர் மார்ஷல், ரயான் ராம்தாஸ், றணாகோ மோர்டன், நர்சிங்டெனோ ரயின், டுவெய்ன்ஸ்மித், கெரிஜெரமி, ரினோபெஸ்ட், ஜேர்மைன் லோசன் ஆகியோரே தேசிய அணியின் புதிய வீரர்கள்.

ஆஷஸ் தொடர் இங்கிலாந்தில் ஆரம்பிக்கவுள்ள இவ்வேளையில், அதுவே கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு ஆறுதல். அதோடு மேற்கிந்தியக் கிரிக்கெட் என்கிற எரிச்சலில் இருந்து விடுபடவும் ஒரு உதவி. ஒரு வெறுப்பேறிய ரசிகர், இந்தளவு இவர்களைப் பற்றி எழுதியதைவிட 100 மீற்றர் உலக சாதனையை ஏற்படுத்தியுள்ள ஜமைக்காவின் அஸாபா பவல் பற்றி எழுதியிருந்தால் ஏதாவது பலன் இருந்திருக்கும் என்கிறார். சரியா..? பிழையா....?

- ஜோசப் கிருஷ்ணா

# விஷ்வாமித்ரர் பாதை

உலகின் தலைசிறந்த பந்து வீச்சாளர்களில் ஒருவர் ஷேன்வோண். இவருக்கு இதைவிட அறிமுகம் தேவையில்லை. விளையாட்டு உலகின் முடிசூடா மன்னனான இவருக்கு கடந்த வாரம் ஒரு பேரிடி விழுந்தது. அதாவது இவரது மனைவி சிமோன் இவரை விட்டுப்பிரிந்து விடத் தீர்மானித்தார். இதற்கான காரணங்களை ஆராய்வது இங்கு நோக்கமல்ல. ஆனால் இவரது பாலியல் பலவீனம் பல சந்தர்ப்பங்களில் ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டே இருந்தது. இது இவரது புகழ்வாய்ந்த கிரிக்கெட் நட்சத்திர அந்தஸ்து மூலம் புறந்தள்ளப்பட்டுக்கொண்டே வந்தது. ரசிகர்கள் இவரது திறமையைப் பாராட்டினார்களே ஒழிய. அவர்களை இவரின் துர்ப்போக்கு பாதிக்கவில்லை.



ஷேன்வோண் - சிமோன் கூடு கலையலாமா?

ஆனால் ஒரு இதயம் ஆழமான காய த்தை உள்வாங்கி துடிதுடித்துக்கொண்டி ருந்தது. அது சிமோனின் இதயம் தான். சிமோன் பல வருடங்கள் பொறுத்துப் பார்த்து. இனியும் சகிக்க முடியாது என்ற நிலையில். இந்த PLAY BOY ஐ விட்டு விலகத் தீர்மானித்தார்.

இதற்கு ஷேன்வோணின் பிரதிபலிப்பு வெறும் வெள்ளைக்காரத்தனமாக இருந்தது. அதாவது நாங்கள் பிரிந்தாலும் நல்ல நண்பர்களாக இருப்போம் என்று கூறியிருந்தார். இதனைக் கூறி ஒரு சில நாட்களே ஆகிய வேளையில், இப்போது செய்திகள் வேறுவிதமாக வருகின்றன. தனக்கென மூன்று குழந்தைகளைப் பெற்றுக்கொடுத்த சிமோனின் பிரிவு எவ்வளவு துயரமானது என்று இப்போது தான் ஷேன்வோனுக்குப் புரிகிறது போலத் தெரிகின்றது. இதனால் தான் சிமோன் என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கையேந்தி நிற்கிறார். இந்த நிலையில் சிமோன் என்ன செய்யப்போகிறார்?

ஷேன்வோனைப் பொறுத்தவரை அவரது கிரிக்கெட் வாழ்வும் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் தற்போது ஆஷஸ் தொடர் வேறு நடைபெற இருக்கிறது. எனவே குடும்பச் சிக்கல்கள் இவரை கிரிக்கெட் மைதானத்தில் திறமையைக் காட்ட விடாது என்று நிச்சயம் நம்பலாம். எல்லா வகையிலும் துன்பச்சுமையிலும், அவமானத்தில் இருந்தும் ஷேன்வோண் மீள வேண்டுமாயின் சிமோன் கருணை காட்டவேண்டும். அதுவே நடைபெற வேண்டும் என்பதே எல்லோரினதும் விருப்பம். குடும்பம் எனும் கூடு குலைந்து விடக்கூடாது.

நல்லது நடக்கும் என எதிர்பார்ப்போம் என்று சிந்தித்துக்கொண்டிருக்கும் வேளையில், சிமோன் சகல தகவல்களையும் மறுத்து 'போதுமடா சாமி' என்று கும்பிடுபோட்டு விட்டேன். அந்தப்பக்கமே தலைவைத்துப் படுக்கமாட்டேன். எனக்கு என் மூன்று பிள்ளைகள் காணும் என்று முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

- மக்டலின்.

# இமயத்தை நோக்கி

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் விம்பிள்டன் ஆடவர் கிண்ணத்தைத் தொடர்ந்து மூன்று முறை கைப்பற்றியவர்கள் மூன்றே மூன்று பேர் தான். சுவீடனின் பியோன்பேக், அமெரிக்காவின் பீட் சாம்பிராஸ், தற்போது இன்றைய நட்சத்திரம் சுவிற்சர்லாந்தின் றோஜர் பெடரர். கடந்த வருடம் ஆடவர் ஒற்றையர் போட்டியில் இவர் சந்தித்தது அமெரிக்காவின் அன்டி றொடிக். மீண்டும் அதே ஜோடி. அதே முடிவு. கடந்த வருடம் நான்கு செட்கள் நீடித்த போட்டி, இவ்வருடம் மூன்றே செட்டுகளில் முடிவடைந்துவிட்டது. இது றோஜர் பெடரரின் ஆற்றல் எவ்வாறு வளர்ந்து கொண்டு வருகிறது என்பதற்கு நல்லதொரு உதாரணம்.

எனது ரெனிஸ் வாழ்வில் நான் விளையாடிய மிக உன்னதமான ஆட்டம் இதுவே என்கிறார் றோஜர் பெடரர்.

இப்பொழுது இவரது கனவு இன்னும் இன்னும் உயரப்பறப்பது. பியோன் பேக்கின் ஐந்து விம்பிள்டன் சாதனைகளை முறியடிக்க வேண்டும் என்பது ஒரு விருப்பம். அதன் பின் அமெரிக்காவின் பீட் சாம்பிராஸின் ஏழு என்ற எண்ணிக்கையை வீழ்த்துவது, அதோடு இவரின் 14 GRANDSLAMS என்ற எண்ணிக்கையைக் கடந்து செல்வது. கடினமான இலக்கு. துணிவான சவால். வயது இருபத்து மூன்றேயான றோஜர் பெடரருக்கு இனி வருங்காலங்களில் நித்திரையும் இருக்கப்போவதும் இல்லை, அதேபோல சந்தோஷத்துக்கும் குறைவு இருக்கப்போவதில்லை.

- அன்ரனி.



றோஜர் பெடரர் ஆக்கிரமிப்பாளன்

CMYK

# நான் அவன் அல்ல

உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு பிறேசிலின் நட்சத்திர வீரர் றொனால்டோ பற்றி அறிமுகம் செய்வது "கொல்லர் தெருவில் ஊசி விற்பது" போன்றது. தற்பொழுது அதே பெயரில் இன்னொரு உதைபந்தாட்ட நட்சத்திரமும் பிரகாசிக்கத் தொடங்கியுள்ளது. இது தோன்றியிருப்பது போர்த்துக்கலில். 22 வயதுடைய இந்த உதைபந்தாட்ட நட்சத்திரத்தின் முழுப்பெயர் கிறிஸ்ரியானோ றொனால்டோ. கப்டன் லூயிஷ் பிகோவின் நம்பிக்கைக்குரிய முன்வரிசை வீரர்.

சென்ற வருடம் நடைபெற்ற யூரோ கிண்ணத்தில் போர்த்துக்கல் அணி இரண்டாமிடத்தைப் பெறுவதற்கும், தற்பொழுது நடைபெற்று வரும் உலகக் கிண்ணத் தகுதிச் சுற்றுப் போட்டிகளில் ஐரோப்பா சார்பில் போட்டியிடும் குழுவொன்றில் போர்த்துக்கல் முன்னிலை வகிக்கவும் கிறிஸ்ரியானோ றொனால்டோவின் பங்களிப்பு அளப்பரியது.

உதைபந்தாட்ட வீரர்கள் பொருளாதார ரீதியில் தமது வாழ்வைச் செழிப்புறச் செய்வதற்கு ஐரோப்பிய கழகங்களை நாடுவது ஒன்றும் புதிதல்ல. அந்தப் பாரம்பரியத்துக்கு கிறிஸ்ரியானோ றொனால்டோவும் புறநடையானவரல்ல. 2003, ஆவணியிலிருந்து இங்கிலாந்தின் மான்செஸ்ரர் யுனைட்டட் கழகத்துக்காக விளையாடி வருகின்றார். அப்பொழுது மான்செஸ்ரர் கழகம் இவருக்குக் கொடுத்த ஊதியத் தொகை மட்டும் 12 மில்லியன் பவுண்ட்ஸ்கள்.

**Last season** இல் மான்செஸ்ரர் கழகத்துக்காக 40 போட்டிகளில் பங்குபற்றி தனது திறமைக்கு பங்கம் விளைவிக்காமல் 9 கோல்களை அடித்துள்ளார். இது அவரின் ஒப்பந்த காலத்தை மான்செஸ்ரர் கழகம் நீடித்துக்கொள்ளவிருந்த பேச்சுவார்த்தையில் ஒரு சாதக நிலையைத் தோற்றுவித்திருந்தது. ஆனால் இப்போது இவர் பற்றி சில செய்திகள் வெளியாகியுள்ளன.



கிறிஸ்ரியானோ புதிய பறவை

புதிய ஒப்பந்தம் எதிலும் கிறிஸ்ரியானோ கைச்சாத்திடாமையால் தற்போது இவர் மீது கண்வைத்திருப்பது- இந்தக் கழகத்தில் நாம் ஆட மாட்டோமா என உதைபந்தாட்ட வீரர்கள் ஏங்கித்தவிக்கும், ஸ்பானியாவின் றியல் மட்ரிட் கழகமும், பார்சிலோனா கழகமும். இவ்விரு கழகங்களும் 20 மில்லியன் வரை கொடுத்து கிறிஸ்ரியானோவைத் தம் பக்கம் இழுத்துக்கொள்ளும் முயற்சி பற்றியதான செய்தியும், றொனால்டோ, மான்செஸ்ரர் கழகத்தை விட்டு விலகி மேற்கூறிய இரு கழகங்களில் ஒன்றில் விளையாடவுள்ளார் போன்றதான செய்தியும் வெளிவந்துள்ளன.

இது தொடர்பாக வெளிவந்த செய்திகளுக்கு,மான்செஸ்ரர் யுனைட்டட் கழகத்தலைவர் அலெக்ஸ் பேகுஷன் சூசகமாகப் பதிலளித்திருக்கிறார்.

கிறிஸ்ரியானோ எமது மான்செஸ்ரர் கழகத்தை விட்டு உடனடியாக வேறு கழகங்களுக்குச் செல்வதற்கான வாய்ப்பே இல்லை. எமது கழகத்துடனான அவரது ஒப்பந்தம் முடிவடைவதற்கு இன்னும் மூன்று வருடங்கள் இருக்கின்றன. அதன் பின்னரே அவர் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியும் என்கிறார். அத்தோடு இந்த 5 வருட ஒப்பந்தம் தொடர்பாக றொனால்டோ தரப்பிலிருந்து வந்த கடிதம் ஒன்றை தாம் ஆதாரமாக வைத்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

எமது மான்செஸ்ரர் கழகத்துக்குப் போட்டிகள் இல்லாத காலப் பகுதியில் அவரின் தேசிய அணியான, போர்த்துக்கலுக்குச் சென்று பயிற்சியாளர் பிலிப் ஸ்கொலாரியின் பயிற்சிகளைப் பெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளையும், சலுகைகளையும் நாம் வழங்கியுள்ளோம்.

எனவே, கிறிஸ்ரியானோ றொனால்டோ போன்ற உன்னத வீரர்கள் எமது கழகத்தில் தொடர்ந்தும் விளையாடுவதையே நாம் விரும்புகின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

- வீமலன்.

# இதுக்கொரு மனம் வேண்டும்



கிளென் மக்ரா என்றென்றும் வாழ்க

அவுஸ்ரேலியாவினது மட்டுமல்ல உலகத் தரத்திலும் முதன்மையான பந்து வீச்சாளர் என்றால் அவர் கிளென் மக்ராதான். இவரது வயது முப்பத்தைந்தென்றாலும், அணிக்காக வெற்றியைத் தேடிக் கொடுப்பதில் முதல்வன் இவர். எதிரணி வீரர்களை எடைபோடுவதில் சமர்த்தர். சொல்லி விக்கெட் வீழ்த்துவதிலும் சொல்லும் படியானவர்.

ஆஷஸ் தொடருக்காக இங்கிலாந்தில் நிற்கும் இவர் இங்கிலாந்தின் வீரர்களை எடை போடுகிறார். அதிலும் சிறப்பாக தன்னைப் போலவே வேகப்பந்து வீச்சாளராக இருக்கும் ஸ்ரீபன் ஹார்மிசன் பற்றி தன் கருத்தை முன்வைத்துள்ளார். ஹார்மிசன் முடிவடைந்த முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரில் பதினைந்து விக்கெட்டுக்களை வீழ்த்தியவர். இவரது 6 அடி 4 அங்குல உயரமும், இவர் பந்து வீசும் பாணியும் எந்தத் தலைசிறந்த துடுப்பாட்ட வீரரையும் நிலைகுலையவைக்கும் என்பது இவர் பற்றிய மக்ராவின் கணிப்பு.

நட்வெஸ்ட் இறுதிப்போட்டியில் இருவருமே வேகப்பந்து வீச்சாளர்களாகக் கடமையாற்றினார்கள். இருவரும் பத்து ஓவர்களையும் பூர்த்தி செய்தார்கள். தலா மூன்று விக்கெட்டுக்களை இருபத்தேழு ரன்களுக்கு வீழ்த்தினார்கள். ஒரேயொரு வேறுபாடு ஹார்மிசன் இரண்டு கன்னி ஓவர்கள். மக்ரா நான்கு கன்னி ஓவர்கள். தற்போது இங்கிலாந்து அணியின் பலர் எல்லோராலும் ஏற்கப்பட்ட தொன்று. மக்ரா இது பற்றிக் கூறும் போது - கடந்த பதினெட்டு மாதங்களாக இங்கிலாந்து அணியின் கிரிக்கெட் வளர்ச்சியை அளவிடும் போது, அந்த வளர்ச்சிகான கணிசமான பங்கு ஸ்ரீபன் ஹார்மிசனையே சேரும் என்கிறார்.



ஹார்மிசன் வாராய் நீ

ஹார்மிசனின் 2002/03 அவுஸ்ரேலிய சுற்றுப் பயணம் பெரிதும் வெற்றிகரமாக அமைந்ததென்று கூறிவிட முடியாது. அவரது பந்து வீச்சுப் பாணியும், சரியான நிலைப்படுத்தலுக்குள்ளாகாத ஓட்டமும் தொடர்ந்தும் இங்கிலாந்து அணியில் இவருக்கு இடம் கிடைக்குமா என்றொரு சந்தேகத்தையும் எழுப்பி இருந்தது. ஆனால் அந்தக் குழப்ப நிலையில் இருந்து மீண்டு இன்று இங்கிலாந்தின் முக்கிய அங்கத்தவராகவும் மாறிவிட்ட ஹார்மிசன் - உன்னத பந்து வீச்சாளர் கிளென் மக்ராவால் பாராட்டப்படும் 'எதிர்காலப்புயல்' என்றும் விதந்துரைக்கப்பட்டுள்ளார். மக்ரா ஒரு பேச்சுக்காகக் கருத்துக் கூறுபவர் அல்ல.

- செந்தூரன்.

# சரியும் சாம்ராஜ்யம்

ஆனைக்கும் அடி சறுக்கும் என்பது பழமொழி. ஆனால் கங்காருக்கும் அடி சறுக்கும் என்பது புதுமொழி.

ஆம் இங்கிலாந்தில் அண்மையில் நடைபெற்று முடிந்த நட்வெஸ்ட் கிண்ண முத்தரப்பு ஒருநாள் தொடரில் கிரிக்கெட் உலகின் ஜாம்பவான்களான அவுஸ்ரேலிய அணியினரின் சறுக்கலை கிரிக்கெட் ரசிகர்கள் எவரும் எளிதில் மறந்து விட முடியாது.

மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் இங்கிலாந்து சென்ற அவுஸ்ரேலிய அணிக்கு அங்கு ஆரம்பம் முதலே சறுக்கல்கள் தான். ருவென்ரி 20 போட்டியில் இங்கிலாந்து அணியுடன் தோல்வி, உள்ளூர் கழகமான சொமர்செட் அணியுடன் தோல்வி என அடுத் தடுத்து இரண்டு தோல்விகளைச் சந்தித்த அவுஸ்ரேலிய அணிக்கு, தலைமேல் இடி விழுந்தாற்போல் ஏற்பட்ட தோல்வியை எளிதில் மறந்துவிட முடியாது. ஆம் ஒருநாள் போட்டிகளின் தரப்படுத்தலில் கடைசி இடத்தில் உள்ள பங்களாதேஷ் அணியிடம் ஐந்து விக்கெட்டுகளால் தோல்வியுற்றதை எப்படி ஜீரணிக்க முடியும்? தோல்வியுற்ற அணியைச் சீண்டுவது போல இங்கிலாந்தின் பத்திரிகைகளும் செய்திகளை வெளியிட்டிருந்தன.

அதிலும் சீண்டுதலின் உச்சக்கட்டமாக 'பங்களாதேஷ் புலிகள் அவுஸ்திரேலிய அணியைக் கடித்துக் குதறிவிட்டன' என்று ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. அந்த அளவுக்கு அவுஸ்ரேலிய அணியின் தொடர் தோல்விகள் எதிர்பாராதவை.



வோண் - பொண்டிங் கோபுரங்கள் சாய்கின்றன

ஆனால் இதற்கான காரணம் என்னவென்று யாராலும் கண்டறியப்படவில்லை. தொடர்ந்து வெற்றிக்கனியைச் சுவைத்து வந்த அவுஸ்ரேலிய அணிக்கு அதிலும் குறிப்பாக ரிக்கிபொண்டிங் அணித்தலைமையைப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் கிடைத்த பாரிய பின்னடைவாகவே இதனை எண்ணத் தோன்றுகிறது.

ஆயினும் இறுதிப் போட்டிக்கு முன்னேறி அப்போட்டியையும் சமநிலையில் - அதாவது வெற்றி தோல்வியின்றி நிறைவு செய்ய அவுஸ்ரேலிய அணியால் தான் முடியும் என்பதை அவர்கள் நிரூபித்துவிட்டனர். அதிலும் குறிப்பாகப் பந்து வீச்சாளர்களின் பங்களிப்பே இதற்கு உதவியுள்ளது. ஆனால் இதில் திருப்திப்பட்டுக் கொள்ளாமல் தற்பொழுது நடைபெற்ற வருகின்ற இங்கிலாந்து அணியுடனான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரைக் கைப்பற்ற வேண்டும் எனச் சூளுரைத்துள்ளார் அவுஸ்ரேலிய அணித் தலைவர் பொண்டிங்.

எது எவ்வாறாயினும் கடந்த பல வருடங்க ளாக கிரிக்கெட் உலகின் முடிசூடா மன்னர்களாகத் திகழ்ந்து வந்த அவுஸ்ரேலிய அணியினரின் சாம்ராஜ்யம் சரிய ஆரம்பித்து விட்டதா?

- ஜெயஸ்ரீ.

விளையாட்டு அரங்கம்



# நீரிழிவால் பாதிக்கப்பட்டோர் குறித்து விசேட நிபுணர்குழு தரவுகள் சேகரிப்பு!

கிளிநொச்சி —

தாயகத்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரிட்டனிலிருந்து வருகை தந்த விசேட வைத்திய நிபுணர் குழு - பராமரிப்பு சேவை யொன்றை நடத்தி, சில தரவுகளைப் பெற்றுள்ளது.

இந்தத் தரவுகளின்படி நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட தாயக மக்களின் அவலநிலை குறித்து, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எடுத்துக் கூறப்படவுள்ளது.

இந்தப் பராமரிப்பு சேவை ஜூன் 23 ஆம் திகதி தொடக்கம் கடந்த 2 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்டது.

இதில் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மாங்குளம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களுள் 250 பேர் நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்தப் பராமரிப்பு சேவையில் பிரிட்டனிலிருந்து வருகை தந்த விசேட வைத்தியர் - நீரிழிவால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நோயாளியிடமும் - நீரிழிவு ஏற்படுவதற்கான காரணம், தடுப்பதற்கான வழிமுறைகள், உணவுக் கட்டுப்பாடுகள் குறித்து நோயாளருக்கும், தாதியருக்கும் தெளிவாக விளங்கப்படுத்தினார்.

ஒவ்வொரு நாளும் காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை நடத்தப்பட்ட இந்த பராமரிப்புச் சேவையில், நாளொன்றுக்கு 30 தொடக்கம் 40 வரையிலான நீரிழிவு நோயாளர்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு, அவர்களின் தரவுகளும் சேகரித்துக்கொள்ளப்பட்டன

இதில் பிரிட்டனில் வைத்தியத்துறையில் கல்வி பயிலும் 5 மாணவர்கள் கலந்து கொண்டு, சேவை செய்தமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சேவையாற்றும் பொது சுகாதார நிறுவனத்தின் கணிப்பீட்டின்படி, அந்தப் பிரதேசத்தில் 10 வீதத்துக்கும், 12 வீதத்துக்கும் இடைப்பட்டவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று இனங்காணப்பட்டுள்ளது.

அத்துடன் தாயகப்பகுதியில் மறுமலர்ச்சி ஏற்படவில்லை. இதனால் மருந்துகள் பற்றாக்குறை, தரம் குறைந்த இன்சுலின் பாவிக்கப்படுகின்றமை, வைத்தியசாலைக்குச் செல்வதில் சிரமம், போதியளவு மருந்துப் பொருட்கள் கிடைக்கவில்லை, மின்சார வசதியின்மையால் இன்சுலினைப் பாதுகாக்க முடியாதுள்ளது.

சிலர் மர நிழலுக்குக் கீழ் மண்ணில் மட்பானையைப் புதைத்து, குளிர்ந்த நீருக்குள் இன்சுலினையிட்டு பாதுகாக்கின்றனர். இதனால் இன்சுலினின் தரம் குறைந்து வருகிறது என இந்தச் சேவையின் போது தாயகத்தின் சுகாதாரத்துறை அவலநிலைக்குச் சென்றுகொண்டிருப்பது குறித்தும் இனங்காணப்பட்டுள்ளது.

சேகரிக்கப்பட்ட தரவுகள் மூலம் தாயகப்பகுதியில் காணப்படுகின்ற சுகாதார அவலநிலை குறித்து, வெளிநாட்டு சுகாதார நிறுவனங்கள், உலக சுகாதார நிறுவனங்கள் - அவுஸ்ரேலியாவில் இயங்கும் சுகாதார நிறுவனங்களுக்கு அறிக்கை சமர்ப்பித்து, கிடைக்கின்ற உதவிகள் மூலம் தாயகத்தில் மனித நேய உதவிகளைச் செய்வதற்கு இந்த வைத்திய நிபுணர் தீர்மானித்துள்ளார்.

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இறப்பு, பிறப்பு, விவாகப் பதிவுக்கான முத்திரைக் கட்டணம் அதிகரிப்பு!

கிளிநொச்சி —

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் பதிவாளர் அலுவலகத்தில் - விவாக, இறப்பு, பிறப்பு ஆகியவற்றின் விண்ணப்பத்துக்கான முத்திரைக்கட்டணம் - கடந்த 27 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பதிவு இலக்கம் தெரிந்திருந்தால் - 25 ரூபாவும், இரண்டு பிரதிக்கு 50 ரூபாவும், 3 பிரதிக்கு 75 ரூபா பெறுமதியான முத்திரையும் ஒட்டப்படவேண்டும்.

பதிவிலக்கம் தெரியாதவிடத்து - ஒரு பிரதிக்கு 50 ரூபாவும், இரண்டு பிரதிக்கு 75 ரூபாவும், மூன்று பிரதிக்கு 100 ரூபா பெறுமதியான முத்திரையும் ஒட்டப்படவேண் டும்.

இரண்டு வருடத் தேடுதலுக்கு - 100 ரூபாவும், பிரதி பெறுவதாயின் 125 ரூபா பெறுமதியான முத்திரையும் ஒட்டப்படவேண்டும்.

விண்ணப்பதாரிகள் பலர் பழைய முத்திரைக் கட்டண அடிப்படையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதால், பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே, புதிய முத்திரைக் கட்டண முறைப்படி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் முகவரி எழுதிய கடித உறை சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

# பொதுக்கட்டமைப்பின் பணிகளை விரைவில் அமுல்படுத்தவேண்டும்

## முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவிப்பு

முல்லைத்தீவு —

பொதுக்கட்டமைப்பின் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்தகாலப் போரின்போது பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ள முல்லைத்தீவு மாவட்டம் - கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் சுனாமி அனர்த்தம் நிகழ்த்திய கொடூரத்தால், முல்லைத்தீவின் கரையோரப் பகுதிகள் பெரும் அழிவுகளைக் கண்டுள்ளன.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் நிரந்தரக் குடியிருப்பு வசதிகளுக்கும், புனர்வாழ்வுப் பணிகளுக்கும் பொதுக் கட்டமைப்பினுடைய பணிகள் விரைவில் இந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்படவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் அரும்பொருட் காட்சியகம்

கிளிநொச்சி —

போரியல் அருங்காட்சியகம் ஒன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழீழ அரும் பொருட் காப்பு மையத்தினரால் இந்த போரியல் அருங்காட்சியகம் - கிளிநொச்சியில் இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்க, விடுதலைப்புலிகள் நடத்திய சமர்களையும் , அர்ப்பணிப்புகளையும் நினைவு கூரும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி நகரில் வட்டக்கச்சிக்குச் செல்லும் வீதியில் போரியல் அரும்பொருள்காப்பகம் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஜூலை-10

**1806 :** இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு முன்னோடியாக விளங்கிய வேலூர் புரட்சி நடந்தது. அதிகாலை தொடங்கிய புரட்சியில், பல பிரித்தானிய இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டு, வேலூர் கோட்டை புரட்சியாளர்களால் கைப்பற்றப்பட்டு புலிக்கொடி பறக்கவிடப்பட்டது. முற்பகலில் இராணிப் பேட்டையில் இருந்துவந்த பிரித்தானியப் படைகள் கோட்டையை மீளக் கைப்பற்றியதுடன், இரண்டாயிரத்துக்கும் அதிகமான புரட்சி வீரர்களைக் கொன்றுகுவித்தனர்.

**1890 :** அமெரிக்காவின் 44 ஆவது மாநிலமாக வையாமிங் இணைந்துகொண்டது.

**1923 :** இத்தாலியில் முஸோலினி - தனது பாஸிஸ்ட் கட்சியைத் தவிர மற்றக் கட்சிகள் அனைத்தையும் கலைத்துவிட்டார்.

**1940 :** பிரித்தானிய அரசு - தனது நாட்டுப் பெண்களிடம், விமான உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக வீடுகளிலுள்ள அலுமினியப் பாத்திரங்களைத் தரும்படி வேண்டுகோள் விடுத்தது.

**1953 :** ஈழத்துத் தமிழ்ப் புலவர்களுள் மிக முக்கியமானவரும், ஈழத் தமிழர்களின் வாழ்க்கை முறைகளை அழகிய கவிதைகளில் இலகுதமிழில் தந்தவரும், தமிழோடு சைவத்தையும் போற்றி, சிறுவர்களுக்கான பாடல்களைப் படைத்தவருமான தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர் காலமானார்.

**1958 :** உலகிலேயே மிகப் பருமனானவரும் அதிக நிறையுடையவருமான றொபர்ட் ஏர்ல் ஹக்ஸ் என்பவர் இறந்தார். இறக்கும்போது இவருடைய நிறை 437 கிலோவாகும்.

**1962 :** தகவல் தொலைத்தொடர்பில் முன்னோடியாக விளங்கிய "டெல்ஸ்டார்" என்ற விண்வெளித் தகவல் தொடர்பு அஞ்சல் நிலையம் செலுத்தப்பட்டது. இதன்மூலம் அத்லாந்திக்கின் இரு கரைகளிலுமுள்ள கண்டங்களிடையே தொலைக்காட்சி சேவைகளை ஒளிபரப்ப முடிந்தது.

**1962:** ஜோர்ஜியாவில் மார்ட்டின் லூதர் கிங் கைது செய்யப்பட்டார்.

**1976 :** "இத்தாலியின் ஹிரோசிமா" விபத்து ஏற்பட்டது. மிலான் நகரின் அருகில் "இக்மெஷா" இரசாயனத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக அந்தப்பகுதி முழுவதும் காற்றில் "டையாக்ஷின்" என்ற நஞ்சு கலந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களது உடல் எங்கும் கொப்புளங்கள் ஏற்பட்டன. 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்தன.

**1991 :** ரஷ்யாவின் கடந்த ஆயிரம் ஆண்டுகால வரலாற்றில் முதல் முறையாக பொதுமக்களால் ஜனாதிபதி ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொரிஸ் யெல்ட்ஸ்ட்டின் என்பவரே ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

◆ இரு தேசங்களுக்கிடையிலான யுத்தம் என உலக நாடுகளால் வர்ணிக்கப்பட்டதும், வரலாற்று முக்கியத்துவம் பெற்றதுமான ஆகாய, கடல், வெளிச்சமர் ஆனையிறவில் ஆரம்பம்.

**1992 :** போலந்தில் முதல் பெண் பிரதமராக, "ஹன்னா ஷகாக்கா" பதவி ஏற்றார்.

**1994 :** மிக நீண்டகாலமாக அமுலில் இருந்த அவசரகாலச் சட்டம் நள்ளிரவுடன் காலாவதியானது.

**1995 :** இலங்கைக் கடற்படையின் கட்டளைக் கப்பலான "எடித்தாரா" கரும்புலித் தாக்குதல் மூலம் தகர்ககப் பட்டது.

**2001 :** தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றக் கூட்டத்தொடரை இருமாதங்களுக்கு ஒத்திவைத்தார்.

தொகுப்பு - சந்துரு

# மன்னார் - பாப்பாமோட்டை கடற்கரை வீதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் புனரமைப்பு

மன்னார் —

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் - மன்னார் பாப்பாமோட்டைக் கிராமத்தில் கடற்கரைக்குச் செல்வதற்கான புதிய வீதியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் இந்தக் கிராமத்திலிருந்து கடற்கரைக்கு வாகனங்கள் செல்லமுடியாத நிலை காணப்பட்டது.

இந்த வீதியால் மீனவர்கள் குறிப்பிட்ட தூரத்துக்குக் கால்நடையாகச் சென்றே தமது தொழிலை பெரும் சிரமத்தின் மத்தியில் மேற்கொண்டு வந்தனர்.

இதனைக் கருத்திற்கொண்டு முதற்கட்டமாகச் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப்பங்களிப்புடன் இந்தக் கிராமத்திலிருந்த கடற்கரை வரையான 3.5 கிலோமீற்றர் தூரமான வீதி - புனரமைப்புச் செய்யப்பட்டு, புதியதொரு வீதியாக மாற்றமடைந்து காணப்படுகிறது.

தொடர்ந்து 2 ஆம் கட்டமாக பாலம் உட்பட, 2 கிலோமீற்றர் நீளமான தூரம் வரை கிரவலிடப்பட்டு, முழுமையாக அமைக்கப்பட்டுள்ளது.

மீதியாக உள்ள 1.5 கிலோமீற்றர் வீதி, பாலம் போன்றவற்றை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிதிப் பங்களிப்புடன் மூன்றாம் கட்ட வேலையாக, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியால்தற்போது மீன் கொள்வனவு செய்வதற்காக வாகனங்களும், மீனவர்களும் மிகச்சுலபமாகப் போக்குவரத்தை மேற்கொண்டு, தங்கள் தொழிலை மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூவின முன்பள்ளி சிறார்களுக்கான சமாதான அபிவிருத்தி நிகழ்வு!

வவுனியா —

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வவுனியா தெற்கு வலய முன்பள்ளிக் கல்விமேம்பாட்டு நிலையம், மூவின மக்களையும் ஒன்றிணைத்து - நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சமாதான அபிவிருத்திச் செயற்பாட்டின் இரண்டாம் கட்ட நிகழ்வு - சி.எச்.ஏ. நிதியுதவியுடன் அண்மையில் நெளுக்குளம் கிராம அபிவிருத்திச் சங்க (ஆர்.டி.எஸ்) முன்பள்ளியில் இடம்பெற்றது.

முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசபாதம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - சிங்களப் பிரிவின் அவுதப்பிட்டிய முன்பள்ளி, முஸ்லிம் பிரிவில் - பட்டானிச்சூர் முன்பள்ளி, தமிழ்ப் பிரிவில் - நெளுக்குளம் கிராம அபிவிருத்திச் சங்க (ஆர்.டி.எஸ்) முன்பள்ளி ஆகிய முன்பள்ளிச் சிறார்கள் பங்குபற்றினர்.

இந்த நிகழ்வில் - சமாதானத்தை வலியுறுத்தும் ஆடல், பாடல், உடற்பயிற்சி, இசையும் அசைவும் போன்ற கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன் -

தமிழ், முஸ்லிம், சிங்களச் சிறார்களின் மனதில் உணர்வு பூர்வமான சமாதானம், ஒற்றுமையுணர்வு, விட்டுக்கொடுப்பு, பரஸ்பர நல்லுறவு என்பன சிறுவயதிலிருந்தே எப்படி வளர்க்கப்படவேண்டும் என்பதை மூவினப் பெற்றோர்கள் மூலமும், சமூக அமைப்புக்கள் மூலமும் வலியுறுத்தப்பட்டன.

இதில் - வவுனியா தெற்கு வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், சிங்களப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மாதர் மன்ற பிரதிநிதி, கிராமத்தின் மூத்த பிரதிநிதிகள், கிராமத்தின் பொது அமைப்புப் பிரதிநிதிகள், வலய இணைப்பாளர்கள், பிரதேச இணைப்பாளர்கள், தமிழ், முஸ்லிம், சிங்களப் பெற்றோர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.*
திருக்குறள்

# நமது நோக்கு

## சமூகப்பொறுப்புடன் கூடிய நடவடிக்கை

பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்கச் செல்லும் மாணவிகள் - தெருச்சுற்றும் பொறுப்பற்ற இளைஞர்களாலும், சில வேளைகளில் சக மாணவர்களாலும் கூட பல்வேறுவிதமான உபத்திரவங்களுக்கு உள்ளாகிவருவதென்பது - யாழ்.குடாநாட்டில் அன்றாட நிகழ்வாகி விட்டது.

தங்கள் பெண் பிள்ளைகளின் கல்வி குறித்த அக்கறையுடன், அவர்களின் எதிர்காலம் அறிவுசார்ந்த வகையில் வளமாக வேண்டும், சமூகத்தில் அவர்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்ற விருப்பார்வத்துடன் கல்விக் கூடங்களுக்கு அவர்களை அனுப்பும் பெற்றோர்களின் மனதில் என்றுமில்லாத வகையில் அச்சமும், பீதியும் ஆட்கொண்டுள்ள நிலை பரவலாகி வரக்காரணம் என்னவென்பது வெளிப்படையான ஒன்றேயாகும்.

ஒருபுறம் உயர்பாதுகாப்பு வலயம், காவலரண்கள் என அமைத்து சமாதான சூழலிலும் தமது ஆக்கிரமிப்பு சூழலை இறுக்கமாகவே வைத்திருக்கும் படையினரின் செயற்பாடுகளால் ஏற்படக்கூடிய கிருசாந்தி கால அச்சுறுத்தல்கள் இன்னமும் ஆழ்மனதில் பீதியை ஏற்படுத்திய வண்ணம் இருக்கையில் - இன்று தெருவெங்கனும் குழுக்களாயும், கும்பல்களாயும், ஒருவித வக்கிரமான மனநிலையுடன், எந்தவிதமான இலட்சிய இலக்குமின்றி - குடும்பம், சமூகம், தேசம், இனம், என்ற எந்தவிதமான பொறுப்புமின்றி - சுய உழைப்பில்லாது, பிறர் வருமானத்தில் வசதிகளை அனுபவித்துக்கொண்டு, தமிழ் சினிமாக்களில் கூத்தாட்டமிடும் மூன்றாந்தர கதாநாயகர்களாக தம்மைக் கற்பிதம் செய்து கொண்டு திரியும் இளவட்டங்களால் மிகவும் ஆபாசமான முறையில், அநாகரிகமாகவும், தொந்தரவுகளுக்குள்ளாகும் நிலையும் அதிகரிக்கத்தொடங்கியுள்ளமையானது - சமூகப் பொறுப்புடன் சிந்திக்கும் அனைவரையும் கவலைக்குள்ளாக்கியுள்ளது.

எந்தவிதமான கட்டுப்பாட்டுக்கும், கண்டிப்புக்கும் அடங்க மறுக்கும் இந்த இளைஞர்கள் தமது பெற்றோர்கள், உடன் பிறப்புக்கள் போன்றோர்க்கும் மன அழுத்தங்களையும், குழப்பங்களையும் மட்டுமல்ல நிம்மதியின்மையையும் ஏற்படுத்துபவர்களாகவே உள்ளனர்.

தேவையான சமகால ஆடம்பரவசதிகள் அனைத்தும் அபரிமிதமாகவே அவர்களுக்கு கிடைத்துவரும் அந்நிய பொருளாதார வரவுச் சூழலானது - இவர்களுக்கு வாழ்க்கை பற்றிய அர்த்தமற்ற கனவுகளையே அள்ளிவழங்கி வருகையில், அவர்களால் சமூகம் மற்றும் தமது எதிர்காலம் குறித்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாது போய்விட்டது துரதிஷ்டமேயாகும்.

குடாநாடு - கடுமையான போர் மற்றும் பொருளாதார அழுத்தங்களுக்கு முகம் கொடுத்துவந்த இடப்பெயர்வுக்கு முந்திய காலப்பகுதியில் நிலவிய சமூக ஒழுங்கும், மனித நேயமும், இளைஞர்களிடையே காணப்பட்ட பண்பாடும் கட்டுப்பாடும் மட்டுமல்ல, மக்களின் அச்சமற்ற இயல்பு வாழ்வுக்கான உத்தரவாதமும் கூட இழந்துவிட்ட நிலை ஏற்பட இராணுவக்கட்டுப்பாட்டின் கீழான ஏழாண்டு காலச் சூழலே காரணம் என்பதை இன்றைய காலகட்டத்தை ஏக்கத்துடன் நோக்கும் சமூக சிந்தனையாளர்கள் ஒப்புக்கொள்ளவே செய்கின்றனர்.

சந்திக்குச் சந்தி மதுபானக்கடைகள், போதை வஸ்துக்களின் கட்டுப்பாடற்ற பரம்பல், பெருமளவில் இளைஞர்களிடையே சுலபமாகச் சுற்றிவரும் நீலப்படங்கள், மிகமோசமான கலாசாரச்சீரழிவு ஊடகமான தமிழ் திரைப்படங்களின் கட்டுப்பாடற்ற வருகை, ஏனைய இலத்திரனியல் ஊடகங்களூடான தணிக்கைக்குட்படுத்தப்படாத காட்சிகள் போன்ற பலதும் இன்றைய இளைஞர்களை, அவர்களின் அறிவுசார் நிலையிலிருந்து விலகி, மந்த புத்தியுள்ளவர்களாக மாற்றுவதில் வகித்த பங்கு வெளிப்படையானதே.

இவற்றுக்குப் பின்னணியில் இயங்கிய சக்திகளையும் குறிப்பிடாமலே புரிந்துகொள்ளமுடியும்.

இன்று எமது இளைய சமூகத்தவர்கள் மத்தியில் சமூக சிந்தனை குறைந்து, சமூகவிரோத நடவடிக்கைகள் அதிகரித்து வருவதானது சகிக்கமுடியாத ஒன்றேயாகும். குறிப்பாகப் பெண்கள், யுவதிகள், மாணவர்கள் போன்றோரின் வாழ்வியல் சுதந்திரத்துக்கு ஏற்பட்டுவரும் அச்சுறுத்தல்களுக்குக் காரணமாவோரை கண்டும் காணாமல் விடுதல் என்பது உரிமைகளுக்காகப் போராடும் ஒரு இனத்துக்கு ஏற்புடைய ஒன்றல்ல.

இத்தகைய இளைஞர்கள் சொந்த இனத்துக்கும், அதன் சுதந்திர உயிர்ப்புக்கும் ஆபத்தானவர்கள் என்பதால் அவர்கள் மீது கடும் நடவடிக்கையை பொறுப்பானவர்கள் மேற்கொள்வது அவசியமும் அவசரமுமாகும்.

தமிழீழ மாணவர் அமைப்பினர் இது விடயத்தில் கவனமெடுத்து அவர்கள் மீது சமூகப்பொறுப்புடன் நடவடிக்கை எடுக்கப்போவதாக குறிப்பிட்ட 'வீதியோர ரோமியோ'க்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதை பொதுமக்கள் வரவேற்கவே செய்வர்.

குடாநாட்டில் இத்தகைய செயல்களுக்கு காரணமாவோர்களைத் தண்டிக்கவும், கண்டிக்கவும் வேண்டியவர்கள் பார்வையாளர்களாகி மௌனம் சாதிப்பதன் மூலம் அவர்களுக்கு அங்கீகாரம் அளித்து வருகிறார்களோ என சந்தேகப்படும் சூழலில் - மாணவர் அமைப்பினர் அந்தப் பொறுப்பை எடுக்க முன்வந்தமையானது அவர்களின் சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# அரச பயங்கரவாதத்தை உலகுக்கு மீண்டும் தமிழ் எம்.பிக்கள் நினைவூட்டவேண்டும்!

"காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வது" என்ற பழமொழிதான் இப்போது ஜே.வி.பியைப் பற்றிச் சொல்வதற்கு பொருத்தமாக அமையுமென்று நினைக்கிறேன். லண்டனில் அல்கெய்தா தீவிரவாதிகள் வைத்த குண்டுகள் வெடித்து சுமார் ஐம்பது பேர் கொல்லப்பட்டு இருநூறு பேரளவில் காயமடைந்திருக்கின்றனர். லண்டனில் வெடித்த குண்டுகள் லண்டனிலும், இங்கிலாந்திலும் மட்டுமல்ல ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இலங்கையில் அரச பயங்கரவாதத்தின் கொடுமைகளிலிருந்து தப்பி லண்டனில் தஞ்சம் புகுந்துள்ள உறவுகள் அங்கேயும் பயங்கரவாதத்துக்குள் மாட்டிக்கொண்டார்களோ என்ற கவலையில் கடந்த இரண்டு மூன்று தினங்களாகத் தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்களை முற்றுகையிட்ட மக்களைப் பார்த்தவர்கள் அறிந்துகொள்வர்.

இந்தநிலையில் இப்பொழுது ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டதாகக் காட்டிக்கொள்ளும் முன்னாள் பயங்கரவாத இயக்கமான ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, லண்டன் குண்டுவெடிப்புச் சம்பவங்களைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார். பயங்கரவாதத்தை எதிர்த்து சரியான காட்டமான முறையில் நாங்கள் எல்லோரும் சேர்ந்து எங்கள் சக்திகளை ஒருங்கிணைத்து ஒற்றுமையாகச் செய்வதற்குத் தவறிவிட்டோமென்பதையே இச்சம்பவம் மீண்டும் எடுத்துக் காட்டியிருக்கிறதென்று ரஷ்ய அதிபர் புடின் சொல்லியிருப்பதை சோமவன்ச எடுத்துக்காட்டியிருக்கிறார்.

கரும்புலிகள் தினத்தை விடுதலைப் புலிகள் அனுஷ்டிப்பதையும் சோமவன்ச சுட்டிக் காட்டியிருக்கிறார். அதாவது லண்டன் குண்டுவெடிப்புச் சம்பவத்தை விடுதலைப் புலிகளுடன் முடிச்சுப்போட்டு பயங்கரவாதத்துடன் இணைத்திருக்கிறார் என்று நண்பர் பரமசிவம் சொன்னார்.

எப்படியும் உலகப் பயங்கரவாத இயக்கங்களுடன் விடுதலைப் புலிகளையும் இணைத்து மீண்டும் உலக நாடுகளில் பிரசாரம் செய்வதற்கு இங்கு மீண்டும் பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இங்கு நடக்கும் கொலைகள் எல்லாமே விடுதலைப் புலிகளால் நடக்கிறது என்று காட்டுவதற்கு நம்மவர்களையும் துணைக் கிழுத்துக் கொள்கிறார்கள். இதற்கென இருக்கவே இருக்கிறது, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துடன் தொடர்பில்லாத யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரிய சங்கம் என்று சொன்னேன்.

ஜே.வி.பியினர், ஹெல உறுமய என்ற புத்த பிக்குகளின் அரசியல் கட்சி, பிக்குகள் முன்னணி என்று இந்த அமைப்புக்கள் கதிர்காமருக்கு உதவியாக விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகக் காட்டும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன. லண்டனிலுள்ள அன்ரன் பாலசிங்கத்தின் மீதும் புத்தபிக்கு ஒருவர் பாய்ந்திருக்கிறார். விடுதலைப் புலிகளை மீண்டும் சர்வதேச அரங்கில் பயங்கரவாதிகளாகக் காட்டுவதற்கு நோர்வேயின் மத்தியஸ்த செயற்பாடுகள் இடையூறாக இருக்கிறது. ஐரோப்பிய யூனியன் நாடுகளும் இலங்கைக்கு வந்து கிளிநொச்சிக்கும் வடக்கு-கிழக்குக்கும் சென்று நிலைமைகளைப் பார்த்துச் செல்வதும் இவர்களது பயங்கரவாதப் பிரசாரத்துக்குத் தடையாக இருக்கிறது. இதனால்தான் சந்திரிகா அம்மையாரின் 60ஆவது வயது மணிவிழா மலரில் அமைச்சர் கதிர்காமர் எழுதிய கட்டுரையில் விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையவேண்டுமென்பது போன்ற புரிந்துணர்வு ஒப்பந்த விதிகளை நோர்வே செயற்படுத்தவேண்டும். இல்லையேல் இவற்றைச் செயற்படுத்தக் கூடியவர்களுக்கு வழிவிட்டு நோர்வே ஒதுங்கிக்கொள்ளவேண்டுமென்று கூறியிருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

அது சரி ஒப்பந்தத்தைச் செயற்படுத்துபவர்களுக்கு வழிவிட்டு நோர்வே ஒதுங்கிக் கொள்ளவேண்டுமென்று கதிர்காமர் சொல்லும்போது இவர் வேறு ஆட்களை நோர்வேயின் இடத்துக்குக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்துவிட்டார் என்று தோன்றவில்லையா? என்று கேட்டேன்.

அப்படித்தான் தெரிகிறது. யாரையோ ஏற்பாடு செய்தபின்தான் நோர்வே தன்னால் முடியாவிட்டால் போகலாம் என்று சொல்லத் துணிந்திருக்கிறார். இதுமட்டுமல்ல இப்போது கதிர்காமர் அம்மையாரை விட்டு ஜே.வி.பி பக்கம் கொஞ்சம் சார்ந்து போகிறமாதிரியும் தெரிகிறது. ஜே.வி.பியும், ஹெல உறுமயக்களும் இப்பொழுது விடுதலைப்புலிகளால் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து என்றும், பயங்கரவாதத்தை ஒடுக்குவது என்று கூறும்பொழுது ஒவ்வொரு பிராந்திய ரீதியாகவும் பயங்கரவாதத்தை ஒழித்து, சர்வதேச ரீதியில் ஒழிக்க வேண்டுமென்றும் பிரசாரம் செய்வதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முனைகின்றன என்று பரமசிவம் சொன்னார்.

பயங்கரவாதம் ஏன் தோன்றியது, எப்படித் தோன்றியது என்பதையும், இலங்கையில் அரச பயங்கரவாதமே தோன்றி அப்பாவித் தமிழ் மக்களுக்கெதிராகச் செய்த அட்டூழியங்களை மீண்டும் உலக நாடுகளுக்கு நினைவுபடுத்தவேண்டிய பொறுப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிறையவே இருக்கிறது. இன்றும் உயர் பாதுகாப்புவலயம் என்று மக்களின் குடியிருப்புகளை ஆக்கிரமித்து வைத்து, தமிழ்ப் பொதுமக்கள் நிம்மதியாக வாழமுடியாத நிலையை உலக நாடுகளுக்கு நாடாளுமன்றப் பிரதிநிதிகள்தான் சொல்லவேண்டும் என்று சொன்னேன்.

தமிழ்க்கூட்டமைப்பினரின் செயற்பாடுகளை பயங்கரவாதிகளே தீர்மானிப்பதாலேயே நாடாளுமன்றம் அமைதியிழந்தது என்று முன்னாள் பிரதம மந்திரி இரத்தினசிறி விக்கிரமநாயக்கா கூறியிருந்தார். நாடாளுமன்றத்தில் ஹெல உறுமய பிக்குகளும், ஜே.வி.பியினரும் இழுபறிப்பட்டதற்கும், பிக்கு கடத்தப்பட்டதற்கும் எந்தப் பயங்கரவாத இயக்கம் பின்னணியிலிருந்தது என்பது இரத்தினசிறிக்குத் தெரிந்திருக்கவேண்டுமேயென்று சொல்லி நடந்தார் பரமசிவம்.

## வாசகர் நோக்கு

### ஏன் மதிக்க வேண்டும்?

இன்று இலங்கையில் மனித உயிர்கள் உரிமைகள் மதிக்கப்படுவதும் இல்லை - நீதியான தீர்ப்பு விசாரணைகள் இல்லை. இந்தக் குற்றச்சாட்டை ஆசிய மனித உரிமை அமைப்புக்கூட ஆதாரத்துடன் கூறியுள்ளது. நாட்டில் கொலை, கொள்ளைகள் ஒரு புறத்தில் தாண்டவமாடும் அதேவேளை - மறுபுறத்தில் அரசு ஆட்சியதிகாரங்களைக் கொண்டு நடத்த முடியாமல் தள்ளாடுகிறது.

இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணம் திறமையற்ற, நேர்மையற்ற ஆட்சிமுறையே ஆகும்.


தமிழ்மக்களுக்கு உரிமையும் இல்லை, நீதியும் இல்லை பிறகேன் நாங்கள் இருக்கவேண்டும். எமக்கு உரிமைகள் கொடுக்காத அரசை நாம் ஏன் மதிக்க வேண்டும். ஆகவே தான், சிங்களப் பேரினவாதிகளிடம் எதையுமே எதிர்பார்க்காது தமிழர்கள் தனித்தமிழீழத்தைக் கட்டியெழுப்பியுள்ளனர். நீதித்துறை, காவல்துறை, மனித உரிமை செயலகம் என அனைத்தையுமே திறம்படச் செயற்படுத்தி வருகின்றனர்.

இந்தச் செயற்பாடுகளை வெளிநாட்டு முன்னாள் நீதிபதி பாராட்டியுமுள்ளார். ஆயினும், சிலர் இன்னமும் இதை அறிய மறுக்கின்றனர்.

நெல்லியடி-ஆர்.என்.கோ

இனப்படுகொலை நினைவாக... பகுதி -II

- சந்துரு -



**குண்டுவீசித் தாக்கப்பட்ட நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தின் உயிரிழந்தவர்களின் 10 ஆவது ஆண்டு நினைவாக இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

# தமிழ்ச் சிறுவர்களின் குருதியின் மூலம் தம்மபதம் மீள் பதிப்புச் செய்யப்பட்ட நாள்

(நேற்றைய தொடர்ச்சி...)

இரவு பத்துமணிவரை யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டவர்களில் அறுபத்தைந்துக்கும் அதிகமானவர்கள் உயிரற்று, சடலங்களாகவே எடுத்துச் செல்லப்பட்டதுடன், நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட வர்கள் படுகாயமடைந்த நிலையிலேயே எடுத்துச் செல்லப்பட்டனர். உயிரிழந்த வகையில் அனுப்பப்பட்ட சடலங்களுள் இரண்டுவயதுடைய தெ.புருஷோத்தமன் என்ற குழந்தை தொடக்கம், 16 வயதுக்கும் உட்பட்ட சிறுவர்களது சடலங்கள் முப்பத்தெட்டுக்கும் அதிகமாக இருந்தன என்பது - அந்தக் கோர நிகழ்வு நடந்துமுடிந்ததும், மண்ணெண்ணை விளக்கொளியில் இரவிரவாக கட்டட இடிபாடுகளில் இருந்து உடல்களை அகற்றிய தொண்டர்களில் சிலர் இன்றுங்கூட கண் கலங்கியபடி கூறும் தகவல்களாகவுள்ளன.

இந்த மீட்பு நடவடிக்கைகளில், இவர்கள் மூன்று நாட்களுக்கும் மேலாக தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர். பிணவாடை வீச, வீதி ஓரங்களிலும், கட்டட இடிபாடுகளுள்ளும் மனித உடல்களின் அவயங்கள் சிதறுண்டு கிடக்க, அனைத்தையும் சேகரித்து வைத்தியசாலைக்கு அனுப்பியவைபோக, எஞ்சிய அடையாளம் காணமுடியாத அவயங்களைச் சேகரித்துப் புதைக்கப்பட்டபின்னர், எடுத்த கணக்கெடுப்பின்படி இறந்தவர் தொகை 157 எனக் கண்டுகொள்ள முடிந்தது.

இதனைவிட 9 ஆம் திகதிமுதல் 11 ஆம் திகதிவரை, இணுவில், தாவடி, கொக்குவில் போன்ற இடங்களிலும் குண்டுவீசித் தாக்குதல் நடத்தப்பட்டு, அங்கும் பலரது உயிர்கள் பறிக்கப்பட்டன. இத்தனைக்கும் இந்தக்காலப் பகுதியில் யாழ். அரச செயலகத்துக்கு வழங்கப்பட்டிருந்த தொலைபேசி இணைப்பும் துண்டிக்கப்பட்டிருந்தது.

நடந்த நிகழ்வுகள் இப்படியாக இருக்க, இந்தச் சம்பவம் தொடர்பாக நெதர்லாந்து வானொலியின் கொழும்புச் செய்தியாளராக இருந்த நீற்றா செபஸ்ரியன் அன்றைய இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்காவிடம் வினாவியபோது, அவர் பின்வருமாறு பதிலளித்திருந்தார்

இராணுவ நடவடிக்கை நடைபெறும் பகுதியில் அந்த தேவாலயம் இல்லை. அதனால் அது தாக்கப்படவில்லை எனத் திட்டவட்டமாகக் கூறுகின்றேன். இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகப் போகிறது என, நாம் ஏற்கனவே அறிவித்து விட்டோம். அதனால் இராணுவ நடவடிக்கையில் சிக்கி 150 பொதுமக்கள் இறந்தனர் என்பது உண்மையாக இருக்காது. உயிரிழந்த தமது உறுப்பினர்களைப் பொதுமக்கள் எனப் புலிகள் கணக்குக் காட்டியிருக்கலாம் எனக் குறிப்பிட்டிருந்தார். ஆம். அவரது பார்வையில் மட்டுமல்ல, இலங்கைப் படையினர் மற்றும் சில அரசியல் வாதிகளது பார்வையில் கூட, இராணுவ அழிவுகளின் போது உயிரிழக்கும் ஒவ்வொரு தமிழருமே புலிப்போராளிகளாகவே தெரிந்தனர். அதன் விளைவுதான் இங்கே சிதறுண்டு போன அந்த இரண்டு வயதுப் பாலகன் கூட புலிஉறுப்பினர் கணக்கில் அடக்கப்பட்டான்.

இந்தப்படுகொலைச் சம்பவம் திட்டமிட்ட ஒரு கொடூரச் செயல் என மனித உரிமைகள் கழகம் விமர்சித்திருப்பதாக வெரித்தாஸ் வானொலி தனது 11ஆம் திகதிய ஒலிபரப்பில் தெரிவித்து இருந்த் நிலையில், சர்வதேச செஞ்சிலுவை அமைப்பும் இந்தச் சம்பவம் தொடர்பாகத் தனது தலைமைச் செயலகத்தினால் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்த நிலையில் - நடந்த உண்மைகளை மறைத்து இலங்கை அரசும், அதன்ஊடகங்களும்பொய்ப் பிரசாரம் செய்வதாக யாழில் இருந்த அரச சார்பற்ற தொண்டு அமைப்புக்கள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருந்த நிலையில், இலங்கையின் இராணுவப் பேச்சாளர் இவ்வாறு குறிப்பிட்டமையானது - இலங்கை இராணுவத்தின் இன அழிப்பு நடவடிக்கைகளை மீண்டும் ஒரு தடவை சர்வதேசத்துக்குக் காட்டி நின்றது.

இந்தப்படுகொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக 12.07.1995இல் படுகொலைகளை உறுதிசெய்து, சர்வதேச செஞ்சிலுவைக் குழு ஜெனிவாவில் ஒரு அறிக்கையை வெளியிட்டது. அன்றே கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் ஒரே சமயத்தில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

கடந்த ஒன்பதாம் திகதி வடக்கு நகரான யாழ்ப்பாணத்தில், தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது பாரிய அளவிலான இராணுவ நடவடிக்கை ஒன்றை இலங்கை ஆயுதப்படைகள் ஆரம்பித்தன.

கடுமையான பீரங்கித் தாக்குதல்கள், வான் தாக்குதல்களைக் கொண்ட, இந்த இராணுவ நடவடிக்கை உடனடியாகவே பத்தாயிரக்கணக்கான பொது மக்களை அந்தப்பிரதேசங்களை விட்டு வெளியேற வைத்தது. இடம்பெயர்ந்த வர்களில் அதிகமானோர் கோயில்களிலும், தேவாலயங்களிலும் தஞ்சம் புகுந்தனர். அந்த வகையில் நவாலியிலுள்ள சென் பீற்றர்ஸ் தேவாலயத்திலும் பல நூற்றுக்கணக்கானோர் தஞ்சம் புகுந்தனர்.

நேரயாகப் பார்த்தவர்கள் கூறிய தகவலின்படி, 9ஆம் திகதி மாலை 4.30 மணியளவில் இந்தத் தேவாலயமும், சூழவுள்ள கட்டடங்களும் விமானப்படையின் தாக்குதல்களுக்கு இலக்காகின. இந்தத் தாக்குதல்களால் பெண்கள், குழந்தைகள், உட்பட 65பேர் பலியாகினர். 150 பேர்வரை காயமுற்றனர்... பெரும்பாலான சடலங்கள் கட்டட இடிபாடு களில் இருந்து இன்னும் மீட்கப் படவில்லை... எனத் தொடர் கிறது சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்ட அந்த அறிக்கை.


நவாலிப் படுகொலைச் சம்பவத்தில் சிக்கி, படுகாயமுற்று அவயங்களை இழந்து, உயிர் தப்பிய பலரும் இன்னும் அந்தச் சம்பவத்தின் பாதிப்பை உள ரீதியிலும் சுமப்பவர்க ளாகவே வாழ்ந்து வருவதைக் காண முடிகிறது. அவர்களில் ஒருவரே நவாலி மேற்கைச் சேர்ந்த அ.சதாசிவம் என்ற பெரியவர்.



இவர் இந்தத் தாக்குதலில் அகப் பட்டு, தனது இடது கரத்தை இழந்து விட்டதோடு, உடலெங்கும் குண்டுச் சிதறல்கள் தந்து விட்ட காயங்களது அடையாளங்களையும். சுமப்பவராகவே வாழ்ந்து வருகிறார். இந்தப் படு கொலை நிகழ்வு தொடர்பான அவரது மனப் பதிவுகள் எவ்வாறுள்ளன என்பதை அவரது வார்த்தைகளாலேயே நாம் அறிந்து கொள்ளலாம்.

''இஞ்சாலப் பக்கத்துல சண்டை தொடங்கிற்றுதாம் எண்டு காலையில இருந்து சனமெல்லாம் ஒரே கதைதான். ரோட்டு ரோட்டா சனம் மூட்டை முடிச்சோட நடக்கிறதும், வீட்டுச் சனங்கள் அதுகள மறிச்சுக் கதகேக்கிறதும், தண்ணி குடுக்கிறதுமாக இருந்துதுகள். அவன் அங்கால அடிக்கிற செல்லுகள் விழுந்து வெடிக்கிற சத்தம் இஞ்சையே காத வெடிக்க வைக்கிறமாதிரி இருந்தது.

நான் அப்ப பால்மாடு வளர்த்தனான். பால் எடுத்துக் கொண்டு, நவாலிக் கோயிற்பக்கம் வழமையாக் கொடுக்கிற வீடுகளுக்குக் கொடுக்கப் போனனான். ஆனா மெயின்ரோட்டால சைக்கிளில போக ஏலாமல் போயிற்று. ஒரே சனம். நிரை நிரையா, மூட்ட முடிச்சுகளோட சின்னனுகளத் தூக்கிக் கொண்டு நடக்குதுகள். அழுத பாதி, அழாதபாதி, அழாமப் பாதி நடக்குதுகள். நானும் பின்னே சைக்கிள உருட்டிக் கொண்டு அதுகளோட கதைச்சிக் கதைச்சி நடந்துபோறன். சேச்சிலயும், முன்னால கடைகளிலயும், ரோட்டோர மரங்களுக்குக் கீழயும், ஒரே சன வெள்ளம். கொஞ்சம் பொடியனுகள். அந்தச் சனத்துக்கு பாணும், தண்ணியும், கஞ்சியும் குடுத்துக்கொண்டு நிண்டதுகள். நான் அதெல்லாம் கடந்து பொன்னரியம் ரீச்சரிண்ட வீட்ட போய்ப் பால் குடுக்கக் கூப்பிட்டனான். அங்கையும் ஒரே சனம். சுழிபுரம், சித்தங்கேணி, காரைநகர் எண்டு எல்லா இடமும் இருந்து வந்த சனங்கள் அந்த வீட்டில இருந்துதுகள். நான் கூப்பிட்டதும் பொன்னரியம் ரீச்சர் வந்து எட்டிப்பார்த்துப்போட்டு, பால் போத்தல் எடுத்துக்கொண்டு வாறன். எண்டுட்டு உள்ளுக்கப் போயிற்றா. நான் சைக்கிள நிப்பாட்டிப் போட்டு இறங்கி, படலைக்குள்ள நிக்க, குண்டு போட்டுட்



டான், குண்டு போட்டுட்டான் எண்டு கத்திக்கொண்டு ரோட்டால சனங்கள் அள்ளுப்பட்டு அங்கால இஞ்சால ஒடுதுகள். அதுக்குப்பிறகு எனக்கு என்ன நடந்தது எண்டு தெரியாது. அண்டு இரவு எனக்கு அறிவு தெரியக்குள்ள, நான் பெரியாஸ் பத்திரியில படுத்துக் கிடக்கிறன். என்ர இடது கையத் தூக்கேலாமல் கிடந்தது. மகனும், மகளும்தான் எனக்குக்கிட்ட அழுதுகொண்டு நிண்டினம்.

பிறகுதான் சொல்லிச்சினம் என்னையும் தூக்கிப்போட்டுக் கொண்டு வந்தவங்கள், நானும் செத்துப் போட்டன் எண்டு போட்டு செத்த பொடிகளோட போட்டுவிட்டினமாம். மகள் தான் வந்து, சவங்களுக்குள்ள தேடிப்பார்த்து, என்ர தாடிய வைச்சு என்னைய மதிச்சிப் போட்டு, தனியா தூக்கிவைக்க வெளிக்கிடக்குள்ளதான் என்ர உடம்பில சின்னத் துடிப்பு இருந்ததைக் கண்டுபோட்டு, டொக்டரக்கூட்டிவந்து காட்டி, பிறகு அவர் வைத்தியம் பார்த்துத்தான் என்னக் காப்பாத்தினது. ஒரு கைய எடுத்திட்டினம். உடம்பெல்லாம் குண்டுப் பீசு பட்ட காயம் இருக்கு. இது தம்பி மறக்க ஏலாத கொடுமை. நான் சொன்ன பொன்னரியம் ரீச்சர மூண்டு நாளுக்குப் பிறகு தானே இடிபாடுகளுக்குள்ள புதைஞ்சிருந்து மீட்டது. அப்பிடி அந்தச் சம்பவம் ஒரு பயங்கரக் கொடுமை தம்பி. நான் இவ்வளவு கஷ்டப்பட்டு, காயப்பட்டு, கைய இழந்து, உழைக்க வழியில்லாம பாதிக்கப்பட்டபிறகு, எனக்கு கிடைச்ச நட்டஈடு எவ்வளவு தெரியுமா தம்பி? வெறும் 12,500 ரூபா மட்டும்தான்.

இது என்னத்துக்குக் காணும் தம்பி? இது எனக்கு மட்டுமல்ல, என்னைப் போல பாதிக்கப்பட்டவங்களுக் கும் இப்பிடித்தான் நட்டஈடு கொடுத்தவங்களாம். எல்லாரை யும் நல்லா ஏமாத்திப் போட்டினம்...'' என தனது உள்ளத்துச் சுமைகளைப் பகிர்ந்து கொண்டார். ஐயா சதாசிவம்.


ஆம். உண்மைதான்.

திட்ட மிட்டு இன அழிப்புச் செய்வதும், எமது வீடுகளில் இருக்கும் - பிரதேசத்தில் இருக்கும் விலைமதிப்பற்ற சொத்துகளை - ஆபரணங்களை ஏன் ஆலய விக்கிர கங்களைக்கூட, தமது பகுதிக்கு அள்ளிச்சென்று விட்டு, பின்னர் வெறும் கண் துடைப்பாக ஒரு சில ஆயிரங்களை நட்டஈடாகக் கொடுப்பதும்தானே இன்றுவரையான வரலாறு இருந்துள்ளது.

தமிழர்கள் இதுகாலவரை அனுபவித்த இழப்புகள்தானே இன்று அவர்களது முதலீடுகளாக்கப்பட்டுள்ளது.

எதற்கும் ஒரு எல்லை உண்டல்லவா? அந்த எல்லை மீறப்படும்போது, அங்கு ஏற்படுத்தப்படும் தாக்கம் எவ்வாறானது என்பதை வந்து போன சுனாமி நன்றாக விளக்கி விட்டுச் சென்றுள்ளதல்லவா? இந்த உண்மையை, தமிழின அழிப்பையே இலக்காகக் கொண் டியங்கும் சகல தரப்பினரும் புரிந்துகொள்வது பயனுடையதாக இருக்கும் என்றவகையிலான ஒரு வேண்டுகோளை முன்வைத்தபடி, இன்றைய தினத்திலே உயிரிழந்த அந்தச் சிறுவர்கள் உள்ளிட்ட, 157 பேரின் நினைவுகளை நெஞ்சிலே சுமந்துகொண்டு, அந்தத் தேவாலய முன்றலில் மௌனமாய் ஒருநிமிடம் பிரார்த்தித்து நிற்போம். (முற்றும்...)

# சூடானில் 21 வருட உள்நாட்டு போருக்கு அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு!




(ஹாட்டூம்)


**15 லட்சம் பேரைப் பலி கொண்டு கடந்த 20 வருடங்களாக இடம்பெற்று வந்த சூடானின் உள்நாட்டுப் போரை முடிவிற்குக் கொண்டு வரும் வகையில் அந்த நாட்டு அதிபர் தென்பகுதி கிளர்ச்சிவாதிகளுடன் அதிகாரங்களைப் பகிரும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.**

**இதன்படி - சூடானின் புதிய அரசியல் யாப்பின் பிரகாரம் அந்த நாட்டின் தென் பகுதிக்கு சுயாட்சி வழங்குவதுடன் முன்னாள் கிளர்ச்சிவாதத் தலைவர் ஜோன் கராங் சூடானின் உப ஜனாதிபதியாக பதவியேற்றதுடன் முன்னாள் கிளர்ச்சிவாதிகளும் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவுள்ளனர்.**



ஆபிரிக்காக் கண்டத்தில் சூடான் மிகப்பெரிய நாடாகும். அத்துடன் இங்கு பல்வேறு இன மக்களும் வாழ்ந்து வருகின்றனர். பாலைவனங்கள், மலைத் தொடர்கள், ஆற்றுப்பள்ளத் தாக்குகள் மற்றும் மழை வீழ்ச்சியை உருவாக்கும் காடுகள் என்பவற்றையும் சூடான் கொண்டுள்ளது.

சூடானில் - கடந்த 21 வருடங்களாக வடபகுதி முஸ்லிம்களுக்கும் தென்பகுதி கிறிஸ்தவர்களுக்குமிடையே போர் இடம்பெற்று வந்தது. இதனால்



சுமார் 15 லட்சம் மக்கள் உயிரிழந்தனர். இந்த நிலையில் போரை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் கடந்த இரண்டு வருடங்களாக சூடான் அரசாங்கத்திற்கும் கிளர்ச்சிவாதிகளுக்கும் இடையில் நடைபெற்று வந்த சமாதானப் பேச்சுவார்த்தையின் ஒரு அங்கமாக இரு தரப்புக்குமிடையே கடந்த ஜனவரிமாதம் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது.


சூடானில் சமாதானம் ஏற்படுவதன் மூலம் அதன் பொருளாதார வளர்ச்சி வேகம் பெருமளவில் உயரும். சூடான் மிகப்பெரியளவில் விவசாய நிலங்களைக் கொண்ட நடாகும். அத்துடன், தங்கம், பருத்திப்பஞ்சு என்பவற்றுடன் எண்ணை வளத்தையும் சூடான் கொண்டுள்ளது.

சூடானில் உத்தியோக பூர்வ மொழியாக அராபிய மொழியும் அரச மதமாக இஸ்லாமும் இருந்தது. ஆனால் சூடானில் அராபிய மொழியைப் பேசாதவர்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். அரசாங்கம் நாடு முழுவதும் ஷரிய சட்டத்தை அமுல்படுத்த எடுத்த முயற்சியை இவர்கள் முறியடித்தனர்.

1999 ஆம் ஆண்டிலிருந்து அங்கு அவசரகாலநிலை உள்ளது. இதன்படி பலர் எவ்வித காரணமுமின்றி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் சூடான் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வலதுசாரிக் குழுக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

சூடானின் ஜனாதிபதியாக ஓமர் ஹசன் அகமட் அல் - பசீர் உள்ளார். இவர் 1989 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் - சூடானில் தேர்தல் மூலம் தேர்தெடுக்கப்பட்ட பிரதமர் சதீக் அல் - மாடியை பதவி கவிழ்த்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இதன் பின்னர் இவர் நாடாளுமன்றத்தைக் கலைத்து அரசியல் கட்சிகளைத் தடைசெய்து நாட்டைப் பாதுகாக்கும் புரட்சிகர கட்டளைச் சபை ஒன்றை நிறுவி, அதன் மூலம் அரசாங்





கத்தை நடத்தி வந்தார். இந்த நிலையில் ஜனாதிபதி அல் - பசீர், தேசிய இஸ்லாமிய முன்னணி தலைவர் ஹசன் அல் - துராபியுடன் கூட்டணி அமைத்தார். அல் - துராபி அரசாங்கத்தின் தத்துவாசிரியராக இருந்ததுடன், 1991 ஆம் ஆண்டு சூடானின் வடபகுதியில் இஸ்லாமிய ஷரிய சட்டத்தையும் அமுல் படுத்தினார்.

இதன்பின் 1993 ஆம் ஆண்டு நாட்டைப் பாதுகாக்கும் புரட்சிகர கட்டளைச் சபையைக் கலைத்த ஜனாதிபதி பாசிர் அதிகாரத்தை நேரடியாக தனது கையிலெடுத்தார்.

இதன் பின்னர் 1996 ஆம் ஆண்டு பாசிர் தேர்தல் மூலம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். துராபி நாடாளுமன்ற சபாநாயகராக நியமிக்கப்பட்டார். 1999 ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு வரையப்பட்டது. இதன் மூலம் அரசியல் கட்சிகள் வரையறுக்கப்பட்ட அளவிற்குள் செயற்பட அனுமதிக்கப்பட்டன.

எனினும், நாடாளுமன்றின்மூலம் ஜனாதி பதிபதவியை அகற்றி மீண்டும் பழையபடி பிரதமர் ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென நாடாளுமன்ற சபாநாயகர் துராபி உத்தரவிட்டதையடுத்து 1999 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதி - அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியதுடன், துராபியையும் சிறையில் அடைத்தார். இதன் பின்னர் 2000 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாகவும் பாசிர் ஜனாதிபதியாகத் தெரிவானதுடன், அவரது ஆதரவாளர்களான தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாடாளுமன்றை பிரதிநிதித்துவப்படுத்தினர். எனினும், எதிர்க்கட்சிகள் இந்தத் தேர்தலை பகிஷ்கரித்ததுடன் இந்தத் தேர்தலில் ஜனாதிபதி பெரும் மோசடி செய்ததாகவும் குற்றம் சாட்டியிருந்தன.



இந்த நிலையில் சூடானின் மேற்குப் பிராந்தியமான டர்பூரில் நிலவும் வன்செயல்களை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி பாசிருக்கு சர்வதேச சமூகம் அழுத்தத்தைக் கொடுத்தது.


1944 ஆம் ஆண்டு சூடானில் சாதாரண விவசாயக் குடும்பமொன்றில் பிறந்த பாசிர் தனது இளம் வயதிலேயே இராணுவத்தில் இணைந்து விரைவாக பதவிகளைப் பெற்றுக் கொண்டார். 1973 ஆம் ஆண்டு இஸ்ரேலுடன் நடந்த போரில் எகிப்திய இராணுவத்தில் இணைந்து இஸ்ரேலுக்கு எதிராகப் போரிட்டார். அத்துடன், சூடானின் தென் பகுதியில் கிளர்ச்சிவாதிகளுக்கெதிரான நடவடிக்கையை இவரே தலைமையேற்று நடத்தினார்.

சூடானின் ஊடக சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வானொலி, தொலைக்காட்சி என்பன அரசாங்கத்தாலேயே நடத்தப்பட்டு வந்தன. ஒரே ஒரு கேபிள் தொலைக்காட்சிச் சேவையும் அரசாங்கத்துடன் இணைந்து தனியாரால் நடத்தப்பட்டு வந்தது. தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கான நிரந்தர தணிக்கை அதிகாரியாக இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டார்.

சூடானின் சனத்தொகை ஐ.நா.வின் இந்த வருட கணக்கெடுப்பின் படி 35 மில்லியனாகும். தலைநகர் ஹாட்டூம் நிலப்பகுதி : 2.5மில்லியன் சதுர கிலோ மீற்றர் (966,757சதுர மைல்), பிரதான மொழிகள் : அராபிக், நுயூபியன் மற்றும் பிறமொழிகள். பிரதான மதம் : இஸ்லாம், கிறிஸ்தவம். உச்ச வய தெல்லை 54 வயது (ஆண்கள்) 57வயது (பெண்கள்) (ஐ.நா.வின் கணக்கெடுப்பு). நாணயம் 1 டினார் - 10 சூடான் பவுன்ஸ் பிரதான ஏற்றுமதி : எரி பொருள், பருத்திப்பஞ்சு மற்றும் பிற பொருட்கள் என்பனவாகும்.



## பண்டிதர் பரந்தாமனின் நூல் வெளியீடு!



பண்டிதர் வீ.பரந்தாமனின் 'வேர் - அடி வழித் தமிழ்ச் சொற்பியற் சிற்றகர முதலி' நூல் வெளியீட்டு விழா நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சிவலிங்கராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை யாழ். மாவட்ட வணிக ஒன்றியத் தலைவர் ஜெயராசா, பேராசிரியர் நித்தியானந்தன் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஏற்றிவைத்தார். வரவேற்புரையை கலாநிதி ரகுநாதன் நிகழ்த்த, வாழ்த்துரையை கலாநிதி நித்தியானந்தன் நிகழ்த்தினார். யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வெளியீட்டுரையை நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி செ.திரு நாவுக்கரசு, பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

முதற்பிரதியை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வழங்க யாழ். மாவட்ட கல்விக்கழகத் தலைவர் திலகவதி பெரியதம்பி பெற்றுக்கொண்டார். நிகழ்வில் ஆர்வலர்கள். ஆசிரியர்கள், மாணவர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.


## CARITAS - HUDEC JAFFNA

**Livelihoods Program Manager job Description**
**Caritas - Hudec Jaffna.**

Job Purpose :To work in full partnership with the Caritas Internationalis(CI) Livelihood Program expatriate Advisor in designing, managing, monitoring and evaluating projects which assist individuals affected by the tsunami to restore their livelihoods. To ensure a high degree of program quality in project design, implementation, monitoring and evaluating. To work with CI livelihoods partner to identify capacity building needs of project officers, project managers and animators/ social workers. To prepare timely reports to donors.

**Responsibilities:**
The post holder reports directly to the overall Program Manager/ Coordinator. The post holder undertake the following activities.

1. Direct, supervise and manage project officers, project managers and animators/social workers in idetifying projects through a participatory process which are inclusive of a diverse group of individuals, including vulnerable groups.
2. Ensure a high level of program quality in livelihood project design, implementation,monitoring and evaluating.
3. Identify capacity building needs of team's project officers, project managers and animators/social workers and local partners.
4. Organize trainings and workshops to build and improve capacities of the amove mentioned staff.
5 Prepare accurate and timely reports to donors.
6. Share experiences, methodologies and lessons learned with CI Livelihood partner in other Diocese of Srilanka.
7. Represent Caritas-Hudec on the issue of livelihoods and income generating activities at district and divisional level coordination meetings with government, NGOs, UNorganisations and private sector.
8 . Work with project officers to regularly monitor and evaluate livelihood programs (fisheries, agriculture, small enterprises.)

**Skills and Competencies.**
**Essential.**
* Demonstrated management experience with a special emphasis on project management related to micro - enterprise and income generating activities.
* Experience using word processors, spread sheets, and e-mail
* Knowledge and experience working with participatory methods.
* Demonstrated knowledge in agriculture, fisheries and small enterprises sectors
* Fluency in Tamil and English
* Good communication skills.

Caritas - Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender. Women are encouraged to apply.
Post based in Jaffna, with regular travels to the Vanni and occasional travels to Colombo.

Interested candidates are encouraged to apply by submitting.
1. Their Curriculum vitae,
2. A letter of motivation, and
3. Two references before july 15,2005 at **Caritas - Hudec 14, Mathew's Road, Deogu street - Jaffna.**
Submissions can also be sent by e-mail at **hudec@ sltnet . lk.** Only candidates retained for test/interview will be notified by telephone. Please make sure to include a telephone contact with your submission.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## சுகாதாரத் திட்டங்களை
# தமிழீழ சுகாதாரசேவை அனுமதியுடன் நடைமுறைப்படுத்துமாறு அறிவிப்பு!

கிளிநொச்சி ___

தமிழர் தாயகப் பிரதேசங்களில் பொது சுகாதாரம், மற்றும் மருத்துவ மனைகளில் சுகாதாரம் தொடர்பான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது உத்தேச திட்டங்களை தமக்கு முன்னளித்து அதற்கான அங்கீகாரத்தினைப் பெற்ற பின்னர் திட்டங்களைச் செயற்படுத்துமாறு தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவை தொடர்பாக நேற்று தமிழீழ சுகாதார சேவை பணிப்பாளர் ச.விக்கிரமன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எவ்வளவு வளங்களைச் செலவு செய்தாலும் சுகாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படாதவையாகப் புதிய வடிவங்களில் தோற்றம் பெற்றவண்ணமே உள்ளன. எமது செயற்பாடுகள் அவ்வப் பிரதேச சமூக, கலாசார, புவியியல், அரசியல் பின்னணிகளுக்கேற்ப ஒருங்கிணைக்கப்பட்டு செயற்படுத்தப்படாவிடின், நாம் செலவிடுகின்ற வளங்கள் யாவும் விழலுக்கிறைத்த நீராகிப் போவதுடன், பொன்னான காலமும் விரயமாகி விடுகிறது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக ஏற்கனவே இனங்காணப்பட்டு ஒருங்கிணைந்த கண்காணிப்பின் கீழான வேலைத் திட்டங்கள் செயற்படுத்தல் வேண்டும் என்னும் தீர்மானத்தின் கீழ் 1998 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தன. 2002 இன் பின்னர் ஏற்பட்ட போர் நிறுத்த காலத்திலும், சுனாமி அனர்த்தத்தின் பின்பும் எழுந்தமானமான சுகாதார வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டு வருகின்றன.

இந்த நிலையில், தமிழர் தாயகப் பகுதிக்கான ஒட்டுமொத்த சுகாதாரத் திட்டமொன்றை தமிழீழ சுகாதார சேவையினராகிய நாம் வரைந்துள்ளோம். அவை அனைத்து நிறுவனங்களும், அந்தத் திட்டங்களுள் அடங்கும் வகையில் தமது வேலைத் திட்டங்களை இனம் கண்டு அனுமதி பெற்றுச் செயற்படுத்துவது பிரதேசத்தின் உண்மையான சுகாதார மேம்பாட்டுக்கு இட்டுச் செல்லும் என நம்புகிறோம்.

இதனைக் கருத்தில்கொண்டு இனிவரும் காலங்களிலும் சுகாதாரம் தொடர்பான வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ள உத்தேசிக்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் எவையாயினும் தங்கள் உத்தேசத் திட்டத்தை எமக்கு முன்னளித்து எமது முதன்மைத் திட்டத்துக்குள் அமையக் கூடியவாறு தங்கள் திட்டங்களை வடிவமைத்துச் செயற்படுத்துவதன் மூலம் சீரான, உண்மையான சுகாதார மேம்பாட்டுக்கு ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.



படையத் தொடக்கப் பயிற்சிக் கல்லூரியின் பத்தாவது ஆண்டு நிறைவு நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவரிடம் கல்லூரியின் சிறப்புத் தளபதி கேணல் ஆதவன் இரு நூல்களை கையளிக்கிறார்.

# நவாலிப் படுகொலை நினைவாக நேற்று மாலை சிறப்பு நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம் ___

நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயத்தில் தங்கியிருந்த அப்பாவிப் பொது மக்கள் மீதான அரச படையின் கண்மூடித்தனமான தாக்குதலில் கொல்லப்பட்ட 147 பேரின் 10ஆம் ஆண்டு நிறைவுதினம் நேற்று மாலை 5 மணியளவில் ஆலய முன்றலில் - பங்குத்தந்தை அருட்திரு. நேசராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியை தொடர்ந்து - அப்புத்தி சன சமூக நிலையங்களின் தலைவர்களால் அஞ்சலித்தீபம் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து - இறந்தவர்களின் நினைவாக மலர்வளையம் பீடத்தில் வைக்கப்பட்டு கொல்லப்பட்டவர்களின் திருவுருவப்படங்களுக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

சென்.பீற்றர்ஸ் பங்கைச்சேர்ந்த ச.ஸ்ரெலன் கருணதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் - நீதிக்கும், சமாதானத்துக்குமான ஆணைக் குழுத் தலைவர் அருட்திரு ஏ.ஜ.பேர்ணாட் அடிகள், நவாலி முருகமூர்த்தி ஆலயத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ சோ.கௌரீஸ்சர குருக்கள். தென்னிந்தியத் திருச்சபை வண.பிதா ஏ. எஸ்.தேவகுணானந்தன். மானிப்பாய் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தொடர்ந்து ஆலயமுன்றலிலிருந்து பாண்ட் வாத்திய இசையுடன் ஊர்வலமாக, சோக மயம் தழுவ, கொல்லப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் மலர் வளையம் வைக்கப்பட்டு, தீபங்கள் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் - தமது உறவுகளை இழந்தவர்கள் சோகம் தாங்க முடியாது ஒப்பாரிவைத்து அழுதமைக் காண முடிந்தது.

(100)

## லண்டன்....

சென்று சேரவில்லை என்றும், குண்டு வெடிப்பின் பின்னர் இவர் காணாமற்போயிருப்பதாகவும் தாயார் ருத்ரூபாவதி பரதசங்கரி தெரிவித்தார்.

ஓல்ட் ஸ்ரீற்றில் உள்ள தபால் நிலையத்தில் மேற்படி யுவதி பணியாற்றிவந்ததாகவும் குண்டுவெடிப்பின் பின்னர் வைத்தியசாலைகளில் தேடுதல் நடத்தியபோதும் இவர் பற்றிய தகவலெதுவும் கிடைக்கவில்லை எனவும் தாயார் மேலும் தெரிவித்தார்.

லண்டனில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களில் இதுவரை 49 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

மேலும் 25 பேர்வரை காணாமற்போயிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## பயிற்சிக் கல்லூரி...

இடம்பெற்ற நிகழ்வில் இக்கல்லூரியின் போராளிகளால் உருவாக்கப்பட்ட அக்கினிப் பரவல் 10ஆம் ஆண்டு பணித்தொகுப்பு ஆகிய இரு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. படைத் தொடக்கப் பயிற்சி கல்லூரியைச் சேர்ந்த சிறப்புத் தளபதி கேணல் ஆதவன் இந்நூலை வெளியிட்டு வைக்க தேசியத் தலைவர் அவற்றை பெற்றுக் கொண்டார்.

இப்பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகளை வழங்கி வரும் ஆசிரியர்களுக்கு இன்நிகழ்வின் போது தேசியத் தலைவர் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

## நான்கு...

அதனுள் சுட்டுக்கொல் லப்பட்ட நிலையில் நால்வரின் சடலங்களும் காணப்பட்டன.

புசல்லாவ பகுதியில் வைத்து கடந்த வெள் ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மத்திய மாகாணசபை முன்னாள் அமைச்சர் முஹமட் அமீன் கடத்தப்பட்டிருந்தார்.

மற்றையவர்கள் நேற்று அதிகாலை 2 மணியளவில் கடத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைகள், வாய், கால்கள் என்பன கட்டப்பட்ட நிலையில் சடலங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் மொஹமட் சகீர், மொஹமட் அமீன் (பகீர்) ஆகியோர் அடையாளம் காணப்பட்டுள்ளபோதும் ஏனைய இருவரது சடலங்களும் இதுவரை அடையாளம் காணப்பட வில்லை.

இந்தக் கொலையின் பின்னணியில் பாதாள உலகக்குழுவினர் இருக்கலாம் எனக் கூறப்படு கிறது.

சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதி - அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள் வசிக்கும் பகுதியென்பது குறிப்பிடத் தக்கது.

# புலனாய்வு அதிகாரிகளைக் கொல்ல 60 பேரைக் கொண்ட புலிகள் குழு!
## மட்டு - அம்பாறையில் செயற்படுகிறதாம்

கொழும்பு ___

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பணியாற்றும், இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்களை கொலை செய்வதற்கு - விசேட பயிற்சிபெற்ற விடுதலைப்புலிகளின் பிஸ்ரல் குழுவைச் சேர்ந்த 60 பேர் அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்த 60பேரில் வன்னியிலிருந்து சென்ற முதல்தர வரிசை பிஸ்ரல் குழுவினரும் அடங்குகின்றனர். இவர்கள் இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்களை கொலை செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுவர்.

பாதுகாப்பு புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த விபரங்களின்படி, இந்தப் பிஸ்ரல் குழுவினர் 15 பேர் கொண்ட அணியாகப் பிரிக்கப்பட்டு மட்டக்களப்பு, மற்றும் அம்பாறை மாவட்டங்களிலுள்ள இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்களை கொல்லும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கருணா குழுவினருடன் இணைந்து செயற்படுவதாகச் சந்தேகிக்கப்படும் இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வு அதிகாரிகளை, இலக்காக வைத்தே இந்த பிஸ்ரல் குழுவினர் செயற்பட்டு வருகின்றனர் என அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

(தே)

## தேசியத் தலைவரே..

வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

இன்று முஸ்லிம் தலைவர்கள் தனித்தரப்பு வேண்டுமென்று பேசுகிறார்கள். முஸ்லிம் தலை வர்கள் மூவர் தனித்தரப்புப் பற்றிப் பேசுகிறார்கள். பொதுக்கட்டமைப்பு வரமுன்னர் யாருமே பிரபாகரனுடன் சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியதும் இல்லை. பொதுக்கட்டமைப்பு வரமுன்னர் யாரும் பத்திரிகை மூலமாகவேனும் ஒன்றும் தெரிவிக் கவில்லை.

இப்போதுதான் கையெழுத்து வைக்க நானா, நீயா என போட்டி போடுகிறார்கள். மூன்று தலைவர்களும் எப்படி கையெழுத்து வைக்கலாம்? யாராவது ஒருவர்தான் கையெழுத்து வைக்க முடியும்.

சுனாமியால் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்குத்தான் அழிவுகள் அதிகம். இதை நிவர்த்தி செய்ய யாருமே இல்லை. முஸ்லிம் தலைவர்கள் பட்டம், பதவி தேடித்திரிகிறார்கள். இந்த மூன்று தலைவர்களில் யாராவது சுனாமியைப் பற்றிப் பேசியிருக்கிறார்களா?

தலைவர் பிரபாகரன் மாத்திரம் தான் முஸ் லிம் மக்களுக்கு நியாயம் தருவார். அவர் தான் உதவுவார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அடுத்த...

அரசுடனும், பாதுகாப்பு அதிகாரிகளுடனும் நடத்திய பேச்சுக்களில் எந்த முன்னேற்றமும் எட்டப்படவில்லை.

அதேவேளை - தமது காலக் கெடுவை அரசு உதாசீனம் செய்யுமானால், நிச்சயம் சுயமான பாதுகாப்புப் பயணத்தைத் தொடர்வோம் என்றும், அதன்பின்னர் போர்நிறுத்த உடன்பாடு குழப்பத்துக்குள்ளாகும் என்றும் புலிகள் எச்சரித்துள்ளனர்.

இந்தநிலையிலேயே இது தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வுகாண நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் அடுத்த சில நாட்களுக்குள் இலங்கை வரவுள்ளார்.

எனினும், இவரது பயணம் தொடர்பான திகதி எதுவும் உறுதிசெய்யப்படவில்லை. ஜான் பீற்றர்சன் குறித்த காலப்பகுதிக்குள் வரமுடியாது போனால், நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் இங்கு வந்து பிரச்சினையைத் தணிக்க முற்படலாம் எனத் தெரியவருகிறது.

## புலிகளை...

உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது யுத்தம் செய்வதனை விடவும் கடுமையானது. எனினும், விடுதலைப்புலிகளுடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் அனைத்தும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தன. விடுதலைப்புலிகளை ஜனநாயக வழிக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை அரசாங்கம், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளை ஏற்றுக்கொள்கிறது. பிற தமிழ் அரசியற் கட்சிகளுடன் நாம் நடத்தும் பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர்.

நோர்வேயில் விடுதலைப்புலிகள் நிதி சேகரிப்பதனைத் தடைசெய்யும் பணி நோர்வே அரசாங்கத்தினுடையதே தவிர நான் அதற்கு பொறுப்பாளியல்ல எனவும் தெரிவித்தார்.

(தே)

## அரசாங்கத்தின்...

அல்லது அரசாங்கத்தைப் பாதுகாக்க ஐ.தே.கட்சி தயாரில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, திடீர் தேர்தலை எதிர்கொள்ள நேரிடுமென்பதால், 2004 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர்ப் பட்டியல் சில தேர்தல் தொகுதிகளில் இதுவரை தயாரிக்கப்படாத காரணத்தால், அவற்றை விரைவாகத் தயாரிக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

அத்துடன், திடீர் தேர்தல் அறிவிக்கப்படுமாக இருந்தால் அதனை எதிர்கொள்வதற்கு உத்தியோகபூர்வ தேர்தல் அறிவிப்புப் பத்திரங்களை மாகாணத் தேர்தல் அலுவலகங்களுக்கு இவ்வார முடிவுக்குள் அனுப்புமாறு தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த தேர்தல் அலுவலகங்களில் உத்தியோகபூர்வ தேர்தல் பத்திரங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு, தேர்தல் ஆணையாளர் தெரிவித்தாட்சி அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

(தே)

## உடனடியாக...

தொழிலாளர் சமாசம், அம்பாறை மாவட்ட மகளிர் அமைப்பு என்பன கூட்டாக தேசியத் தலைவர் வே.பிரபாகரனிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

தற்போதைய சமாதான வழி முறைகள் போலியானவை. தமிழ்மக்களின் பொருளாதாரம் - போராலும், சுனாமியாலும் அழிவடைந்து கிடக்கிறது. இதனை மீளப் புனரமைக்கக் கூடிய எந்த வித நடவடிக்கைகளையும் இலங்கை அரசு ஏற்படுத்தாது. இனியும் ஏமாறத் தேவையில்லை.

எனவே போராடித்தான் தமிழினம் தமது உரிமையைப் பெற வேண்டும் எனத் தமிழர் மேம்பாட்டு பேரவைத் தலைவர் தருமலிங்கம் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு என்பது போலியானது தான். இதனை நடைமுறைப்படுத்துவதில் பேரினவாத சக்திகள் தடையாக இருக்கின்றன. இரண்டு கிலோமீற்றர் தூரத்துக்கு இப்படியென்றால் எவ்வாறு இடைக்கால நிர்வாக சபைக்கு அல்லது தன்னாட்சி அதிகாரசபைக்கு இந்த சக்திகள் ஆதரவு வழங்கப் போகின்றன. எனவே, தமிழினம் தமது உரிமையைப் போராடித்தான் பெறவேண்டும். எனவேதான் தேசியத் தலைவருக்கு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளோம் என அம்பாறை மாவட்ட மகளிர் அமைப்புத் தலைவி யோகாம்பிகை கனகசபை தெரிவித்தார்.

பபு ரெக்ஸ்
இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சுடிதார் துணிவகைகள். சுடிதார் வகைகள். கவுஸ்கோட் துணி வகைகள். லேடீஸ் கவுன். ரீ சேட். ஸ்கேட். பிளவுஸ். கிப்ட் வகைகள். ஓரிபிலேம் கிறீம் வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
பபு கொமினிகேசன்
(பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கு அருகில்)
இல: 30, வளாகவீதி, திருநெல்வேலி.

CATWAS.COM
பரீட்சைக்குத் தோற்றிய மாணவருக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses

| | |
|---|---|
| Diploma in Microsoft Office | 1750/= |
| Diploma in Desktop publishing | 2000/= |
| Diploma in Hardware | 1500/= |
| Diploma in Video Mixing | 2500/= |
| Diploma in Web Page | 3000/= |

Certificate Courses
Word, Excel, Access, Power Point, Windows, Corel Draw, Studio, Photo Shop, Premiere, Page Maker, Cool 3D, Flash, Type Setting

Ms Office பாடநெறியில் இணைவோருக்கு அனுமதிக் கட்டணம் இலவசம்
Diploma Course இல் இணைவோருக்கு Photo Express கற்கைநெறி கற்பிக்கப்படும்
CATWAS.COM
Computer Academy
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
Tel : 021 - 222 3805 E - Mail-Catwasomi@sltnet.lk
[C/4278]

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.07.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.